Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 மாசி 11 ஆம் நாள், ஹிஜ்ரி 1426 முஹறம் 02 (23.02.2004) திங்கட்கிழமை இதழ் :145

வெளிநாடுகளில் வசிக்கும் உறவுகளிடமிருந்து

WESTERN UNION | MONEY TRANSFER வெஸ்டன் யூனியன் | பணப் பரிமாற்றம்

மூலம்

வங்கிக் கணக்கு தேவையில்லை.

தரகு (Commission) ஏதுமில்லை.

எந்நேரமும் சில நிமிட நேரத்தில் உங்கள் கைகளில் பணம் கிடைக்க எம்மிடம் நாடுங்கள்

ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்

303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 5392
Fax : 222 3214
E - Mail :- smskr @ eureka.lk

சிவன்கோவில் வீதி,
காரைநகர்.
T.P:0602212472

(சி/2228)

# மாவீரர்களுக்கு அஞ்சலி செலுத்திய பின் கூட்டமைப்பு இன்று வேட்புமனு தாக்கல்!

## வேட்பாளர்கள் நேற்று ஒப்பமிட்டனர்

(யாழ்ப்பாணம்)

**கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லத்தில் தமிழீழ மாவீரர்களுக்கும், யாழ். நகரிலுள்ள செல்வா நினைவுத் தூபியிலும் அஞ்சலி செலுத்திய பின்னர் - தமிழ்த் தேசிய கூட்டமைப்பினர் இன்று யாழ். மாவட்டத்தில் நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்கான தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளனர்.**

இன்று காலை 10 மணியளவில் கோப்பாயிலுள்ள மாவீரர் துயிலும் இல்லத்திற்கு விஜயம் செய்யும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அனைவரும் மாவீரர்களுக்கு வணக்கம் செலுத்திய பின்னர் அங்கிருந்து யாழ். நூலகப் பகுதியில் உள்ள தந்தை செல்வா சதுக்கத்திற்கு விஜயம் செய்து, அவரது தூபிக்கு மலரஞ்சலி செலுத்திய பின்னர், யாழ். செயலகம் சென்று தமது வேட்புமனுவைத் தாக்கல் செய்யவுள்ளனர்.

தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் வேட்பாளர்கள் அனைவரும் இந்த நிகழ்வுகளில் பங்கு கொள்வர் எனவும் ரெலோ முதல்வர் ந.ஸ்ரீகாந்தா மட்டும் வெலிக்கடை சிறையிலுள்ள ஒன்பது தமிழ் இளைஞர்களின் விடுதலைக்காக அவர்கள் சார்பில் வெலிக்கடை நீதிமன்றத்தில் சட்டத்தரணியாக ஆஜராகவேண்டியிருப்பதால், இந்த நிகழ்வில் கலந்துகொள்ளமாட்டார் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனிடையே யாழ். மாவட்டத்தில் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சார்பில் போட்டியிடும் வேட்பாளர்கள் அனைவரும் நேற்றிரவு வேட்பாளர் நியமனப் பத்திரங்களில் ஒப்பமிட்டனர்.

நேற்றிரவு 8 மணியளவில், யாழ்ப்பாணம் - மார்ட்டின் வீதியிலுள்ள மாவை சேனாதிராசாவின் அலுவலகத்தில் - நியமனப்பத்திரங்களில் கையொப்பமிடும் நிகழ்வு இடம்பெற்றது.

## கூட்டமைப்பு வேட்பாளர் பட்டியல் உத்தியோக பூர்வமாக வெளியீடு!




(யாழ்ப்பாணம்)

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் சார்பில் யாழ்.மாவட்டத்தில் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்கள் 12 பேரினது பெயர்களும், தேசியப் பட்டியல் வேட்பாளர்கள் அறுவரின் பெயர்களும் நேற்றிரவு உத்தியோகபூர்வமாக வெளியிடப்பட்டது.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சோமசுந்தரம் சேனாதிராசா (மாவிட்டபுரம், தெல்லிப்பளை) தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான நடராஜா ரவிராஜ் (சாவகச்சேரி), சின்னத்தம்பி சிவமகாராசா (கொல்லன் கலட்டி தெல்லிப்பளை), பொன்னம்பலம் கஜேந்திரகுமார் (யாழ்ப்பாணம்), எம்.கே. சிவாஜிலிங்கம் (வல்வெட்டித்துறை), ஆகியோருடன் முன்னாள் யாழ்.மாவட்ட கூட்டுறவுச்சங்கத் தலைவர் கந்தையா சிவஞானம் (நல்லூர்), ரெலோ முதல்வர் ந. ஸ்ரீகாந்தா (தீவகம்), ஈ.பி.ஆர்.எல்.எவ். சுரேஷ் அணியின் தலைவர்

(12 ஆம் பக்கம் பார்க்க)

### கத்தரிக்கோல் கழுத்தில் குத்தி சிறுமி பரிதாபகரமாக மரணம்!

(யாழ்ப்பாணம்)

கத்தரிக்கோல் குத்தி பதினான்கு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் புளியங்கூடல் - ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

குமார் ரேகா என்ற சிறுமியே உயிரிழந்தவராவார்.

### தேர்தலில் இருந்து ஒதுங்கிக்கொள்ளுமாறு பொது அமைப்புக்கள் சங்கரியிடம் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ள ஆனந்தசங்கரியை தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியிருக்குமாறு பொது அமைப்புக்கள்

### சொல்ஹெய்ம் - பாலா லண்டனில் சந்திப்பு!

(லண்டன்)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக

(யாழ்ப்பாணம்)

கத்தரிக்கோல் குத்தி பதினான்கு வயதுச் சிறுமி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்த சம்பவம் புளியங்கூடல் - ஊர்காவற்றுறைப் பகுதியில் நேற்று இடம்பெற்றது.

குமார் ரேகா என்ற சிறுமியே உயிரிழந்த வராவார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெரியவருவதாவது,

தனது சகோதரியுடன் கத்தரிக்கோலால்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கட்சி தாவினார் றொனி டிமெல்!

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக்கட்சியிலிருந்த முன்னாள் நிதியமைச்சர் றொனி டிமெல்லும் - அவரது மனைவியான நாடாளுமன்ற உறுப்பினர் மல்லிகா டிமெல்லும் நேற்று ஐக்கிய தேசியக்கட்சியில் இணைந்து கொண்டனர்.

நேற்று இவர்கள் இருவரும் தமது கட்சியில் இணைந்து கொண்டதாக ஐக்கிய தேசியக்கட்சியின் தலைமையகமான சிறிகோத்தா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## ஐ.தே.கவுடன் இணைந்தே இ.தொ.கா. போட்டியிடும்!

(கொழும்பு)

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுவதற்கு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தீர்மானித்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் தமது வேட்பாளர் இருவரை தேர்தலில் நிறுத்துவதற்கு ஐக்கிய தேசியக் கட்சி இணங்கியதையடுத்தே, இந்த முடிவு எடுக்கப்பட்டதாக இலங்கை தொழிலா

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொது அமைப்புக்கள் சங்கரியிடம் கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் சுயேட்சையாகப் போட்டியிடத் தீர்மானித்துள்ள ஆனந்தசங்கரியை தேர்தலில் போட்டியிடாமல் ஒதுங்கியிருக்குமாறு பொது அமைப்புக்கள் கோரிக்கை விடுத்து வருகின்றன.

இதேவேளை - கூட்டணிப் பணிமனையில் அவரைச் சந்தித்து உரையாடுவதற்கு விருப்பம் தெரிவித்தபோதிலும், ஆனந்தசங்கரி அதற்கு மறுத்துவிட்டதாக பொது அமைப்புக்கள் சில வெளியிட்ட அறிக்கைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தேர்தல் மூலம் தமிழ்மக்களின் ஐக்கியத்தை உலகிற்கு வெளிப்படுத்தவுள்ள இந்தவேளையில், தமிழ்மக்களின் ஐக்கியத்தினைச் சீர்குலைக்கும் வகையில் தேர்தலில் சுயேட்சையாக போட்டியிட முயலும் ஆனந்தசங்கரியாரைச் சந்தித்து நிலைமைகளை எடுத்து விளக்கும் நோக்கில் அவரைச சந்திப்பதற்காகச் சென்ற மாணவர் (12 ஆம் பக்கம் பார்க்க)

### அரசியல் முடிவுகளை

## நிதானமாக வெளிப்படுத்திவரும் அற்புதமான மனிதர் பிரபாகரன்!

### வே.பாலகுமாரன் உரை



தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் சமகால அரசியல் சூழலில் நிதானமான முடிவுகளை வெளிப்படுத்தி அற்புதமான நுட்பமான மனிதராகச் செயற்பட்டு வருகிறார் என விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர் க.வே.பாலகுமாரன் தெரிவித்தார்.

புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகி இரண்டு ஆண்டுகள் பூர்த்தியானதையொட்டி நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இன்று தேர்தல் காலத்தில் அரசியல் வாதிகளுக்குப் பின்னால் நின்ற இனவாதிகளும் இணைந்திருக்கிறார்கள். இதில் ஒரு பகுதியாகவே பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிட முன்வந்திருக்கிறார்கள். ஆகவே இலங்கையின் இன்றைய தேர்தலில் ஒரு குழப்ப

(12 ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனில் சந்திப்பு!

(லண்டன்)

நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் எரிக்சொல்ஹெய்ம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேச்சு நடத்துவதற்காக லண்டனுக்குச் செல்லவுள்ளார்.

நாளைமறுதினம் லண்டனில் கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கும் எரிக்சொல்ஹெய்முக்கும் இடையிலான சந்திப்பு இடம்பெறவுள்ளது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பஸ் விபத்தில் சிறுமி உட்பட இருவர் பலி!

(வவுனியா)

வவுனியா மன்னார் வீதியில் தனியார் பஸ் ஒன்று விபத்துக்குள்ளானதில் அதில் பயணம் செய்த நான்கு வயதுச் சிறுமி உட்பட இருவர் உயிரிழந்ததுடன் 16 பேர் காயமடைந்தனர்.

இந்த சம்பவத்தில் முல்லைத்தீவு - உடையார் கட்டைச்சேர்ந்த கந்தையா சாந்தலிங்கம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தேர்தல் பணிகளில் கண்காணிப்புக்குழு ஈடுபடாது

(கொழும்பு)

எதிர்வரும் தேர்தல் காலங்களில் போர் நிறுத்த கண்காணிப்புக் குழு நேரடியாக எந்தப் பணிகளிலும் ஈடுபடாவிட்டாலும், மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தினை உறுதிப்படுத்தும் வகையில் தனது கடமைகளைச் செய்யுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலங்களில் படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்கள், படையினரின் கட்டுப்

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 - 2223891, 2226297
071-2348888, 071-2349999, 011-4512666, 011-2360290, 011-2360291
nail :- jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போஎயார்
வான் வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
your friend in the skies...

# இலங்கை அரசாங்கம்
# வட கிழக்கு மாகாண சபை
# வட கிழக்கு அவசரகால மீள்கட்டுமான வேலைத்திட்டம்
## கடன் உதவி இல: 2880 - CE
## தேசிய அளவிலான போட்டிக் கூறுவிலை
## குடியியல்சார் வேலைகள்
## கூறுவிலை முன்வைப்பதற்கு அழைப்பு (ஐ.எப்.பீ)

## ஐ.எப்.பீ.இல: KN/NEERP/CLG/WSS/01
## KN/NEERP/CLG/WSS/02
## KN/NEERP/CLG/WSS/03

(1) இலங்கை அரசாங்கம் அனைத்துலக அபிவிருத்திச் சங்கத்திடம் (International Development Association) இருந்து வட கிழக்கு மாகாணங்களில் அவசரமாகத் தேவைப்படும் கட்டுமானத் திட்டங்களுக்கான செலவுகளுக்கென கடனுதவித் தொகையொன்று பெற்றுள்ளதனாலே அந்தக் கடனுதவித் தொகையின் ஒரு பகுதியை இதனகத்தே பின்வரும் அட்டவணையிலே விபரிக்கப்படும் ஒப்பந்த வேலைகளுக்கென செலவிடத் தீர்மானித்துள்ளது. உலக வங்கியின் வழிகாட்டல் விதிகள் அட்டவணையிலே குறிப்பிடப்பட்டுள்ள மூலதன உதவிக்கான அனைத்து நாடுகளையும் சார்ந்த பகுதியினர்கள் கூறுவிலைகள் முன்வைக்கத் தகுதியுடையவர்கள் ஆவார்.

(2) இலங்கை அரசாங்கத்தின் கிளிநொச்சி மாவட்டச் செயலாளர் தகுதிவாய்ந்த அனைத்துக் கூறுவிலை முன்வைப்போர்களிடம் இருந்தும் கீழே குறிப்பிடப்படும் அட்டவணையிலே குறிப்பிடப்படும் வேலைத் திட்டங்களுக்கான முத்திரையிட்டு அடைக்கப்பட்ட உறைகளில் உள்ளடக்கிய கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கும்படி வேண்டுகின்றார். கூறுவிலை முன்வைப்போர் ஏதேனும் ஒரு அல்லது அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் கூறுவிலைகள் சமர்ப்பிக்கலாம்.

## அட்டவணை

| ஐ.எப்.பீ. இல. | வேலைத் திட்டத்தின் பெயர் | வேலைக்கான பிணைத் தொகை (ரூபா) | கூறுவிலை முன்வைத்தல் ஆவணங்களின் விலை (ரூபா) | கட்டி முடிக்கவேண்டிய காலம் |
|---|---|---|---|---|
| KN/NEERP/CLG/WSS/01 | பளை நகர சிறிய அளவிலான நீர் விநியோகத் திட்டத்தை மீள் கட்டுமானம் செய்தல் | 66, 000.00 | 800.00 | 04 மாதங்கள் |
| KN/NEERP/CLG/WSS/02 | வட்டக்கச்சி சிறிய அளவிலான நீர் விநியோகத் திட்டத்தை மீள் கட்டுமானம் செய்தல் | 43, 000.00 | 800.00 | 03 மாதங்கள் |
| KN/NEERP/CLG/WSS/03 | கராச்சி சிறிய அளவிலான நீர் விநியோகத் திட்டத்தை மீள் கட்டுமானம் செய்தல் | 147, 000.00 | 800.00 | 05 மாதங்கள் |

(3) கூறுவிலைகள் முன்வைத்தலுக்கான ஆவணங்களை (இரு பிரதிகள்) வெவ்வேறு வேலைகள் சார்பாகவும் பின்னால் குறிப்பிடப்படும் முகவரியிலே அமைந்துள்ள கிளிநொச்சிப் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகத்திலே 25.03.2004 திகதியன்று 15.00 மணிவரை அட்டவணையிலே ஒவ்வொரு வேலைத்திட்டம் தொடர்பாகவும் குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத குறிப்பிட்ட காசுத் தொகையை காசாகவோ அல்லது கிளிநொச்சி அஞ்சல் அலுவலகத்திலே கிளிநொச்சி மாவட்டச் செயலாளருக்குச் செலுத்தப்படவேண்டியதான அஞ்சல் கட்டளை மூலமாகவோ செலுத்துதல் வேண்டும்.

(4) அக்கறையுள்ள கூறுவிலை சமர்ப்பிப்போர்கள் கூறுவிலை சமர்ப்பித்தல் ஆவணங்களைப் பெற்றுக்கொள்வதற்கு முன்பு விரும்பினால் எவ்விதக் கட்டணமும் செலுத்தாமல் பார்வையிடலாம் என்பதுடன் மேலதிகத் தகவல்களையும் -
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
கிளிநொச்சி.
தொலைபேசி இல: 021 - 2285781
அவர்களிடம் பெற்றுக்கொள்ளலாம்.

(5) சமர்ப்பிக்கப்படும் கூறுவிலைகள் திறந்து பார்க்கப்படும் நாளில் இருந்து 90 நாட்களுக்குச் செல்லுபடியாகக் கூடியவையாக இருக்கும் என்பதுடன் 2 ஆம் பந்தியின் கீழே உள்ள அட்டவணையிலே கூறப்பட்ட பிணைப் பணத் தொகை மாவட்டச் செயலாளர், கிளிநொச்சி. அவர்கள் பெயரிலே எழுதப்பட்ட காசோலை மூலம்
தலைவர்,
கூறுவிலை கோரல் சபை,
மாவட்டச் செயலாளர் அலுவலகம்,
கச்சேரி,
கிளிநொச்சி.
என்ற முகவரியிட்டு 26.03.2004 ஆம் திகதி மணி 15.00 க்கு அல்லது அதற்கு முன்பாக செலுத்தப்படல் வேண்டும். கூறுவிலை முன்வைப்புகள் கூறுவிலை சமர்ப்பிப்போர்கள் முன்னிலையிலே கூறுவிலை சமர்ப்பிப்பதற்கான குறிப்பிட்டகாலம் முடிவடைந்த பின்பு உடனடியாக அதே நாளிலே திறக்கப்படும். அந்தக் கூறுவிலைச் சமர்ப்பணங்கள் ஏற்றுக்கொள்வதற்கு என்று குறிப்பிடப்பட்டுள்ள நாளிலே அலுவலகம் மூடப்பட்டு இருந்தால் கூறுவிலைச் சமர்ப்பணங்களை ஏற்றுக்கொள்வதற்கு என்று குறிப்பிடப்பட்ட திகதிக்கு அடுத்துவரும் அலுவலக வேலை நாளிலே அதே இடத்திலும் நேரத்திலும் திறக்கப்படும்.

(6) கூறுவிலை சமர்ப்பிப்போர்களுக்கான அறிவுறுத்தலின் 4 ஆம் பந்தியிலே தனிப்பட்ட வேலை ஒப்பந்தம் வழங்கப்படுவதற்குத் தகுதியாக கூறப்பட்டுள்ள வரையறைகளை கூறுவிலை சமர்ப்பிப்போர்கள் கவனத்திலே கொள்ளுதல் வேண்டும் என்று ஆலோசனை கூறப்படுகின்றது. எப்.பீ.ஐ.யின் கீழ் ஒன்றுக்கு மேற்பட்ட வேலை ஒப்பந்தங்களை வழங்கப்படுவதற்காக கூறுவிலை சமர்ப்பிப்பவர் தன்னிடம் அதற்கான போதிய அனுபவமும் வளங்களும் உள்ளன என்பதனையும் தான் அந்தத் தனிப்பட்ட ஒப்பந்தத்தைப் பெறத் தகுதி பெற்றவர் என்பதனையும் முன்வைக்க வேண்டும்.

(7) ஏனைய விபரங்கள் கூறுவிலை சமர்ப்பித்தல் ஆவணங்களிலே காணலாம்.

T.இராசநாயகம்,
மாவட்டச் செயலாளர்,
கச்சேரி, கிளிநொச்சி.

(C-2247) திகதி: 23.02.2004

# அரசாங்க ஊடகங்கள் அனைத்தையும் தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்கலாம்

## மனித உரிமைகள் நிறுவனம் தெரிவிப்பு

17 ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தின் கீழ் அரச ஊடகங்களை தேர்தல் ஆணையாளர் பொறுப்பேற்க முடியும் என மனித உரிமைகள் மற்றும் சட்ட நிறுவனம் ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது.

ஹொங்கொங்கை தலைமையகமாகக் கொண்ட ஆசிய மனித உரிமைகள் ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படும் கொழும்பு நிறுவனமான சட்டத்தின் ஆட்சி மையம் என்னும் நிறுவனம் இது தொடர்பாக விரிவான விளக்கம் ஒன்றை வழங்கியுள்ளது.

ஊடகவியலாளர் மாநாடொன்றை கடந்த வியாழக்கிழமை நடாத்திய தேர்தல் ஆணையாளர் தயானந்த திஸநாயக்கா - தேர்தல் விவகாரங்களைக் கையாளும் விடயத்தில், தமக்கிருக்கும் அதிகாரங்கள் வரையறைக்குட்பட்டவை என்று கவலை தெரிவித்திருந்தார்.

அரச ஊடகங்கள் விவகாரத்தில் தம்மால் ஆலோசனைகளை மட்டுமே தெரிவிக்க முடியும் என்றும், அவற்றைக் கட்டுப்படுத்தும் அதிகாரம் தமக்குக் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டிருந்தார்.

அவரது இக்கருத்தை மறுத்துரைத்துள்ள சட்டத்தின் ஆட்சி மையம் என்னும் நிறுவனம், 17 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் தேர்தல் ஆணையாளருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி அரச ஊடகங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் ஆகியவற்றை கண்காணிப்பதற்கு விசேட அதிகாரி ஒருவரை அவர் நியமிக்க முடியும்.

2002 ஆம் ஆண்டு மார்ச் மாதம் அமுலபடுத்தப்பட்ட 17 ஆவது திருத்தச் சட்டத்தின் பிரகாரம் நீதியான தேர்தலை நடாத்துவதற்காக தேர்தல் ஆணையாளரினால் வழங்கப்பட்ட ஆலோசனைகளின் பிரகாரம் அரச ஊடகங்கள் செயற்படுகின்றனவா என்பதை இவ் அதிகாரி மேற்பார்வை செய்யவும், கட்டுப்படுத்தவும் முடியும் எனவும் அந்த அமைப்பு தெரிவித்துள்ளது.

தேர்தல் காலத்தில் அரச ஊடகங்களான இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் மற்றும் ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம் என்பவற்றின் நிகழ்ச்சிகள் மற்றும் செய்திகள் என்பன தேர்தல் முறைகேடுகளுக்கு வழிவகுக்கிறதா என்பதை இந்த அதிகாரி கண்காணிக்க முடியுமெனவும், இதுகுறித்து ஊடக அமைச்சருக்கும் அவர் ஆலோசனை வழங்க முடியும் எனவும் இவ்வமைப்பு தெரிவித்துள்ளது.

எனவே, தேர்தல் ஆணையாளர் தெரிவித்த கருத்துக்கள் தொடர்பான தமது உறுதியான நிலைப்பாட்டை தெளிவுபடுத்தவேண்டும் என தேர்தல் கண்காணிப்புக் குழுக்கள் அவரைக் கோரவுள்ளதாகவும், வரி செலுத்தும் மக்களுடைய உடைமைகளான தேசியச் சொத்துக்களை எந்தவொரு கட்சியும் தவறாக பயன்படுத்தாதிருப்பதை அவர் உறுதிப்படுத்த வேண்டும் எனவும், சட்டத்தின் ஆட்சி மையம் எனும் அந்த நிறுவனத்தின் பேச்சாளர் தெரிவித்தார்.



அவுஸ்ரேலியாவில் நடைபெற்ற பொங்கல் விழாவில் உரையாற்றிய தில்லைநடராஜாவைக் கௌரவித்து - கலாசார அமைச்சு வழங்கிய தங்கப்பதக்கத்தை விக்ரோரியா தமிழ் கலாசார சங்கத் தலைவர் சங்கர நாராயணனும், செயலாளர் விக்கிரமசிங்கமும் கையளிக்கின்றனர்.

# ஜனாதிபதியின் பிரசாரக் கருவிகளாக அரச ஊடகங்கள் செயற்படுகின்றன!

## ஐக்கிய தேசிய கட்சி குற்றச்சாட்டு

ஜனாதிபதியின் பிரச்சாரக் கருவிகளாக அரச ஊடகங்கள் செயற்பட்டு வருவதாக ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

இதுகுறித்து, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் செனரத் கப்புகொட்டுவ, புதிய ஊடக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்திலேயே இந்தக் குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் காலத்தில், நீதியாகவும், நேர்மையாகவும் செயற்படக் கடமைப்பட்டுள்ள அரச ஊடகங்கள் குறிப்பிட்ட ஒரு கட்சி சார்பான பிரசாரங்களில் ஈடுபட்டு வருவது குறித்து ஐக்கிய தேசியக் கட்சி கவலை கொண்டுள்ளதாக அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம், ரூபவாஹினிக் கூட்டுத்தாபனம், லேக்ஹவுஸ் பத்திரிகை நிறுவனம் ஆகியவற்றுக்குப் பொறுப்பானவர்கள் இப்போதும் ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்களாகவே செயற்பட்டு வருவது குறித்தும், சுயாதீன தொலைக்காட்சி நிறுவனம் மற்றும் லக்ஹந்த வானொலி ஆகியவற்றிலும் ஜனாதிபதிக்கு நெருக்கமானவர்களே தீர்மானம் மேற்கொள்ளும் சக்திகளாக இருந்து வருவது குறித்தும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

தேர்தல் அறிவிப்பு வெளியான பின்னரான கடந்த பத்து நாட்களாக, தேர்தல் பிரசார காலத்தில் அரச ஊடகங்கள் செயற்படவேண்டிய நடைமுறைகளுக்கு மாறாக அரச ஊடகங்கள் செயற்பட்டு வருவது குறித்தும் கவனத்தைக் கோரியுள்ள இக்கடிதம், அண்மையில் அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் அரச ஊடகங்கள் செயற்படவேண்டிய விதம் குறித்து வெளியிட்ட ஆலோசனைகளுக்கு இது முரணாக இருப்பதாகவும், இதுகுறித்து ஊடக அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் திருப்தியடைந்துள்ளாரா என்றும் கேள்வி எழுப்பியுள்ளது.

# வவுனியா - மட்டக்களப்பில் புளொட் தனித்துப் போட்டி

(கொழும்பு)

எதிர்வரும் நாடாளுமன்றப் பொதுத்தேர்தலில், புளொட் இயக்கத்தின் அரசியல் பிரிவான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி தனித்துப் போட்டியிடப் போவதாக அறிவித்துள்ளது.

வவுனியா, மட்டக்களப்பு மாவட்டங்களில் தமது கட்சி - நங்கூரச் சின்னத்தில் போட்டியிடவுள்ளதாக, கட்சியின் தலைவர் தருமலிங்கம் சித்தார்த்தன் தெரிவித்தார்.

வவுனியா மாவட்டத்தில் சித்தார்த்தன் தலைமையிலான குழுவினரும், மட்டக்களப்பு மாவட்டத்தில் பகீரதன் தலைமையிலான குழுவினரும் தேர்தலில் போட்டியிட வேட்பு மனுவினை நாளை தாக்கல் செய்யவுள்ளதாகப் புளொட் வட்டாரங்கள் தெரிவித்தன.

# கண்டி - நுவரெலியாவில் இ.தொ.கா.தனித்து போட்டி

(கொழும்பு)

அமைச்சர் ஆறுமுகம் தொண்டமானின் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கட்சி - நுவரெலியா மாவட்டத்திலும், கண்டி மாவட்டத்திலும் தனியாகப் போட்டியிடுவதெனத் தீர்மானித்துள்ளது.

ஐக்கிய தேசிய முன்னணியின் கண்டி மாவட்டத்திற்கான வேட்பாளர் பட்டியலில் சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபாவை சேர்த்துக்கொள்ளுமாறு விடுத்த வேண்டுகோளை, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நிராகரித்ததால், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் அந்த மாவட்டத்தில் தனியாகப் போட்டியிடுவதென முடிவு செய்திருக்கிறது.

கண்டி மாவட்டத்தில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் சார்பில் பாயிஸ் முஸ்தபாவை நிறுத்துவதற்கு, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் கடும் எதிர்ப்பை தெரிவித்தார்.

இதனையடுத்தே பிரதமர் ரணில் விக்கிரமசிங்க - பாயிஸ் முஸ்தபாவை பட்டியலில் சேர்த்துக்கொள்வதில்லை என்ற முடிவை எடுத்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் கொத்தணி முறையில் வாக்களிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள வாக்காளர்கள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் அமைக்கப்படும் கொத்தணி வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள அதேவேளை, வாக்காளர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள் என்று இராணுவ தளபதி பலகல்ல தெரிவித்திருக்கிறார்.

எந்தக் காரணங்கொண்டும் வாக்குச்சாவடிகளுக்கு இராணுவப் பாதுகாப்பு வழங்கப்படமாட்டாது. தேவை ஏற்பட்டால் மட்டுமே இராணுவத்தினர் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்படுவார்கள் என்று தெரிவித்த அவர் -

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வருகைதருகின்ற வாக்காளர்கள் - இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் தெரிவு செய்யப்பட்டுள்ள வர்க்களிப்பு நிலையங்களில் மட்டுமே வாக்களிக்க முடியும்.

வாக்காளர்கள் கடுமையான சோதனைக்கு உட்படுத்தப்படுவார்கள். ஆனால், அவர்கள் வாக்களிக்க முடியாத வகையில் எந்தவொரு சோதனையும் மேற்கொள்ளப்படமாட்டாது என்றும் -

புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலிருந்து வாக்களிக்கவருவோர், வாக்களிப்பின் இறுதிநேரத்தில் வருகைதந்து தடுமாறாது, முன்கூட்டியே வருகைதருமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

முன்கூட்டியே வருபவர்களுக்கு தேவையான வசதிகளைச் செய்து கொடுக்கும்படி பிரதேச செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணையாளருக்கும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளன. தேர்தல் காலங்களில் இராணுவத்தினர் வாக்களிப்பு நிலையங்களில் கடமையில் ஈடுபடுத்தப்படமாட்டார்கள். பொலிஸாரின் அறிவுறுத்தல்களுக்கு ஏற்றவகையில் இராணுவத்தினரின் செயற்பாடுகள் அமையும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### தேர்தலில் புத்தபிக்குகள் போட்டி; மக்கள் சுதந்திர முன்னணி கண்டனம்

எதிர்வரும் பொதுத்தேர்தலில் ஜாதிக ஹெல உறுமய கட்சி சார்பில் புத்தபிக்குகள் போட்டியிடுவதனை ஜே.வி.பி - சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் கூட்டான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கடுமையாக விமர்சித்துள்ளது.

இதற்குக் காரணம் புத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவதனால் தேசப்பற்று முன்னணியாளர் ஒருவரும் தமது கூட்டணிக்கு வாக்களிக்கமாட்டார்கள் என்ற இரு கட்சியினரும் அச்சமடைந்துள்ளனர்.

இதேவேளை ஜாதிக ஹெல உறுமயவிற்கு எதிராக இந்த இரண்டு கட்சிகளும் தீவிரமாக ஊடகங்கள் மூலம் பிரசாரம் செய்யவும் தீர்மானித்துள்ளன.

# இரண்டு முன்னாள் எம்.பிக்களை முஸ்லிம் காங்கிரஸ் நீக்கியது!

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் அடிப்படை உறுப்பினர் பதவியிலிருந்து அம்பாறை மாவட்ட சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களான எச்.எம்.எம்.ஹரீஸ், அன்வர் இஸ்மாயில் இருவரும் நீக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் அதி உயர்பீடம், கட்சியின் தலைவரும் முன்னாள் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தலைமையில் நேற்றுமுன்தினம் கொழும்பில் கூடிய போது இந்த இருவரையும் கட்சியிலிருந்து நீக்குவதென்று தீர்மானிக்கப்பட்டது.

கட்சியின் ஒழுக்கத்தையும், கட்டுப்பாட்டையும் மீறியமை, மாற்று அரசியற் கட்சி ஒன்றுடன் ஒப்பந்தம் செய்துகொண்டமை உட்பட பல குற்றச்சாட்டுக்கள் இவர்கள் மீது சுமத்தப்பட்டுள்ளன.

இது குறித்து ஆராய்ந்த பின்னர் இந்த இருவரையும் கட்சியிலிருந்து நீக்குவது தொடர்பாக தீர்மானிக்கப்பட்டிருப்பதாக கட்சியின் தேசிய அமைப்பாளர் கே.எ.பாயிஸ் தெரிவித்தார்.

எச்.எம்.எம்.ஹரீஸும், அன்வர் இஸமாயிலும் முஸ்லிம் காங்கிரஸிலிருந்து கடந்த வெள்ளிக்கிழமை விலகி, ஐககிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் இணைந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (07)

# யுத்தநிறுத்த உடன்பாடு திருப்தி அளிக்கின்றது

## கண்காணிப்புக்குழுப் பேச்சாளர்

(கொழும்பு)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அரசாங்கத்திற்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த உடன்படிக்கையின் முன்னேற்றங்கள் திருப்தியளிக்கக்கூடிய வகையில் அமைந்துள்ளதாக இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு தெரிவித்துள்ளது.

போர்நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு நேற்றுடன் இரண்டு வருடங்கள் பூர்த்தியடைவது தொடர்பாக கண்காணிப்புக் குழுவின் பேச்சாளர் அக்னஸ் பிரகடோட்ரயர் கருத்து வெளியிட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- போர்நிறுத்த உடன்படிக்கை நடைமுறைப்படுத்தப்படுகின்ற விதம் குறித்து நாளாந்தம் அவதானிக்கப்பட்டுவருகிறது. மேலும் குறிப்பாக வடக்கு - கிழக்கின் தற்போதைய நிலவரம் குறித்து கண்காணிக்கப்படுகிறது.

இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இடம்பெறுகின்றனர்.

இதேவேளை இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் தலைவர் ட்ரொன் புறூவ் ஹொவ்டே அடுத்த வாரம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்துவார் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

### அத்துருகிரிய தேடுதல்

# மேலும் 4 பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படும்!

## பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

அத்துருகிரிய - மிலேனியம் சிற்றியில் இராணுவப் புலனாய்வுத் துறையின் இரகசிய மறைவிடத்தில் நடத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையில் பங்கேற்ற மேலும் நான்கு பொலிஸ் அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக பொலிஸ்மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

அடிப்படை உரிமைகளை மீறியதான குற்றச்சாட்டின் பேரிலேயே பொலிஸ் இன்ஸ்பெக்டர்களான ஆர்.ஏ.டி.தர்மரத்ன, அசோக ரத்னவீர, எம்.எம்.மொகட்டி ஹெதர மற்றும கண்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.ஏ.மகேந்திரா ஆகியோருக்கு எதிராகவே நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இந்தத் தேடுதலுக்குத் தலைமை வகித்த சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பொல கட்டாய லீவில் அனுப்பப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வலயமட்ட போட்டி நிரல் தயாரிப்பு கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.வலயத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், நல்லூர், கோப்பாய் கோட்ட பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலைப்பந்து, கரப்பந்தாட்ட சுற்றுப்போட்டிகளில் தெரிவு செய்யப்பட்ட அணிகளிலிருந்து யாழ். வலய போட்டி நிரல் தயாரிப்பதற்கான கூட்டம் யாழ்பபாண வலய முகாமைத்துவ மண்டபத்தில் நாளை செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ளது.

வலைப்பந்து போட்டி நிரல் தயாரிப்பதற்கான கூட்டம் பி.ப.12.30 மணிக்கும், கரப்பந்தாட்ட போட்டி நிரல் தயாரிப்பதற்கான கூட்டம் பி.ப.3.00 மணிக்கும் நடைபெறவுள்ளதாகவும், ஒவ்வொரு அணி பொறுப்பாசிரியர்களையும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறும் யாழ்.வலய கல்விப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (58)

## பாடசாலை மட்ட கிரிக்கெட் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாவட்டப் பாடசாலைகளிடையே நடைபெற்றுவரும் கிரிக்கெட் போட்டித் தொடரில் இன்று திங்கட்கிழமை பி.ப.2.00 மணிமுதல் யாழ்.மத்திய கல்லூரி மைதானத்தில் யாழ்.இந்துக் கல்லூரி அணியை எதிர்தது யாழ்.மத்திய கல்லூரி அணி மோதவுள்ளது.

இந்தப் போட்டி தொடர்ந்து செவ்வாய்க்கிழமை வரை நடைபெறவுள்ளது. (58)

## இல்ல மெய்வன்மைப் போட்டி

(யாழ்ப்பாணம்)

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இனறு பிற்பகல் 1.30 மணிக்கு பாடசாலை அதிபர் எஸ்.ஆனந்தி தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (72)

# இலங்கை அணி ஒரு ஓட்டத்தால் அவுஸ்ரேலியாவை வென்றது!

இலங்கை - அவுஸ்ரேலிய அணிகளுக்கிடையில் தம்புள்ள மைதானத்தில் நேற்று நடைபெற்ற பரபரப்பான இரண்டாவது சர்வதேச ஒருநாள் கிரிக்கெட் போட்டியில் இலங்கை ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது.

முன்னதாக நாணயச் சுழற்சியில் வென்ற இலங்கை அணி துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. இதன்படி - முதலில் ஆடத் தொடங்கிய இலங்கைக்கு ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான சனத் ஜெயசூரியவும், அணித் தலைவர் அத்தப்பத்துவும் இணைந்து நல்லதொரு அடித்தளத்தை இட்டனர். இவர்கள் இருவரும் இணைந்து ஆரம்ப இணைப்பாட்டமாக 121 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஜெயசூரிய 55, அத்தப்பத்து 45 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்த பின்னர் வந்த சங்ககார, மஹேல ஜெயவர்த்தன இருவரும் முறையே 39, 38 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தனர்.

இவர்களுக்குப் பின்வந்த எந்தவொரு வீரர்களும் நிலைத்து நின்று ஆடவில்லை. அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்குள் ஆட்டமிழந்தனர். இறுதியில் இலங்கை அணி 49.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களைப் பெற்றது. இலஙகை அணி வீரர்களில் - அத்தப்பத்து 47, களுவிதாரன ஓட்டமெதுவும் பெறாதநிலையிலும், குமார் தர்மசேன 2 ஓட்டங்களைப் பெற்ற நிலையில், ரன் அவுட்டானதுமே இலங்கை அணியின் ஓட்டவேகம் கட்டுப்படுவதற்கு காரணமாகும்.

பந்துவீச்சில் ஜிலெஸ்பி, பிரட்லீ இருவரும் விக்கெட் எதனையும் கைப்பற்றாத நிலையில் காவி, சைமண்ட்ஸ் இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும், கிளார்க் 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு அவுஸ்ரேலியா துடுப்பெடுத்தாடியபோது ஆரம்பத் துடுப்பாட்ட வரிசையில் மாற்றமிருந்தது. வழமையாக ஆரம்பத் துடுப்பாட்டக்காரராக களமிறங்கும் கில்கிறிஸ்டிற்கு பதிலாக ஹைடனுடன் கிளார்க் ஜோடி சேர்ந்தார்.

ஆட்டத்தின் முதலாவது ஓவரிலேயே சமிந்தவாசின் பந்துவீச்சில் கிளார்க் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். பின்னர் ஹைடனுடன் ஜோடி சேர்ந்தவர் அணித் தலைவர் பொண்டிங். இவர்கள் இருவரும் இரண்டாவது விக்கெட் இணைப்பாட்டமாக 141 ஓட்டங்களைப் பெற்றனர்.

பொண்டிங் 69 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க மார்ட்டின் வந்தார். அவரும் 5 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அதன்பின் ஹைடனுடன் ஜோடி சேர்ந்தவர் சைமண்ட்ஸ். இருவரும் சிறப்பாக ஆடிக்கொண்டிருக்கையில், ஹைடன் 93 ஓட்டங்கள் பெற்ற நிலையில் ஆட்டமிழந்தார். பின் கில்கிறிஸ்ட் இவர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தார். பின்னர் பெவன் சைமனுடன் ஜோடி சேர்ந்து இருவரும் சிறப்பாக விளையாடினர்.

இந்தப் போட்டியின் கடைசி ஓவரில் அவுஸ்ரேலியா 7 ஓட்டங்களைப் பெறவேண்டிய நிலையில் சமிந்தவாஸ் பந்து வீச வந்தார். வாசின் சிறந்த பந்துவீச்சினால் அவுஸ்ரேலியா முதல் 5 பந்துகளிலும் 3 ஓட்டங்களையே பெற முடிந்தது. இறுதிப்பந்தில் நான்கு ஓட்டங்கள் பெறவேண்டிய நிலையில் மைக்கல் பெவனால் 3 ஓட்டங்களை மட்டுமே பெறமுடிந்தது. இதனால், இலங்கை அணி ஒரு ஓட்டத்தால் வெற்றிபெற்றது.

பந்துவீச்சில் குமார் தர்மசேன, உபுல் சந்தன இருவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் சமிந்தவாஸ் 3 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

5 போட்டிகள் கொண்ட தொடரில் நடந்து முடிந்த இரு போட்டிகளிலும் இரு அணிகளும் ஒவ்வொரு போட்டியில் வெற்றி பெற்று 1:1 என்ற சமநிலையில் உள்ளன. மூன்றாவது போட்டி நாளை மறுதினம் பிரேமதாஸ விளையாட்டரங்கில் பகல் இரவு போட்டியாக நடைபெறவுள்ளது.



## 200 விக்கெட்டுக்களை கைப்பற்றினார் ஹீத்ஸ்ரிக்



சிம்பாப்வே அணியின் முன்னணி வேகப்பந்து வீச்சாளர்களில் ஒருவரான ஹீத்ஸ்ரிக் பங்களாதேஷ் அணிக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் டெஸ்டில் அஷ்ரப்பின் விக்கெட்டைக் கைப்பற்றிய தன் மூலம் 200 விக்கெட்டுக்களைக் கடந்தார்.

3 ஆவது நாளான நேற்றைய ஆட்டநேர முடிவில் பங்களாதேஷ் அணி முதல் இன்னிங்ஸில் 9 விக்கெட் இழப்புக்கு 313 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

அந்த அணியில் அஷ்ரப் 98 ஓட்டங்களும் ஹுசைன் 48 ஓட்டங்களும் எடுத்தனர். சிம்பாப்வே தரப்பில் ஹீத்ஸ்ரிக் 4 விக்கெட்டுக்களையும் ஹொண்டா 3 விக்கெட்டுக்களையும், பிளிஸ்னட், பிரைஸ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

# தமிழீழ தேசிய விளையாட்டுவிழா: மூன்றாம் நாள் போட்டி முடிவுகள்

தமிழீழ தேசிய பெருவிளையாட்டு விழாவின் மூன்றாம் நாள் போட்டிகள் நேற்றுக்காலை கிளிநொச்சி பொது விளையாட்டரங்கில் நடைபெற்றன.

தேசியக் கொடியினை சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் தளபதிகளில் ஒருவரான லெப். கேணல் கோபித் ஏற்றிவைத்தார். மாவீரரின் திருவுருவப்படங்களுக்கு சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு தளபதிகளில் ஒருவரான அமுதாப், யாழ்.பல்கலைக்கழக உடற்கல்வி இணைப்பாளர் இளம்பிறைநாதன், தமிழீழ விளையாட்டுத்துறை மகளிர் பொறுப்பாளர் ஆரபி தமிழீழ காவற்துறையைச் சேர்ந்த கிருபா, வவுனியா சைவப் பிரகாச மகளிர் கல்லூரி உடற்கல்வி ஆசிரியை சுகுணா, யாழ்.மாவட்ட நடுவர்களான ஜெயா வின்சன், ஆனந்த ஜெயகரன், பீதாம்பரம், திருமலை மாவட்ட உதைபந்தாட்ட அணித் தலைவர் வசந்தன் ஆகியோர் ஈகச் சுடரேற்றி மலர்மாலை அணிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து போட்டிகள் ஆரம்பமாகின. பெண்களுக்கான கபடி போட்டியில் முல்லை அணி 65:21 என்ற புள்ளி அடிப்படையில் மன்னார் அணியை வென்றது.

ஆண்களுக்கான கபடி போட்டியில் யாழ். அணி, மட்டு.அணியை 42:22 என்ற புள்ளி அடிப்படையில் வென்றது. இந்தப் போட்டிகளுக்கான நடுவர்களாக ஜஸ்ரின், அபயகுணசேகரா ஆகியோர் கடமையாற்றினர்.

மற்றொரு பெண்களுக்கான கரப்பந்தாட்ட போட்டியில் மன்னார் அணி 2:0 என்ற செட் கணக்கில் வவுனியா அணியை வென்றது. திருமலை அணி 2:0 என்ற செட் கணக்கில் முல்லை அணியை வென்றது. இந்தப் போட்டிகளுக்கு நடுவர்களாக மனோகரன், செல்வராசா ஆகியோர் கடமையாற்றினர்.

ஆண்களுக்கான தாச்சிப் போட்டியில் முல்லை அணி 12:11 என்ற புள்ளி அடிப்படையில் வவுனியா அணியை வென்றது.

மட்டக்களப்பு - முல்லை அணிகளுக்கிடையில் நடைபெற்ற 30 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் போட்டியில் மட்டக்களப்பு அணி வெற்றி பெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது.

முன்னதாக நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற முல்லை அணி களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மட்டு அணி 28 ஓவரில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 153 ஓட்டங்களைப் பெற்றது.

இந்த அணி சார்பாக, ரூபராஜ் 35, மோதஸ் 27 ஓட்டங்களை கூடுதலாகப் பெற்றனர்.

பந்துவீச்சில் வி.சரவணன், டி.சுபாஸ்கரன் தலா 3 விக்கெட்டுக் களைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய முல்லை அணி 22 ஓவரில் அனைத்து விக்கெட்டுக்களையும் இழந்து 97 ஓட்டங்களையே பெற்றதனால் 56 ஓட்டங்களால் தோல்வியைத் தழுவியது. இந்த அணியின் சார்பில் சுபாஸ்கரன் கூடுதலாக 47 ஓட்டங்களைப் பெற்றார்.

பந்துவீச்சில் அருண்பிரசாத் 3, கஜன், ரூபராஜ் தலா 2 விக்கெட்டுக்களை கைப்பற்றினர்.

இந்தப் போட்டிக்கு நடுவர்களாக சிவகரன், ஜேக்கப் ஆகியோரும், மூன்றாவது நடுவராக இ.சிறிதரனும் கடமையாற்றினர்.

மட்டக்களப்பு - திருமலை அணிகளுக்கிடையில் நடந்த உதைபந்தாட்டப் போட்டியில் மட்டக்களப்பு அணி 1:0 என்ற கோல் கணக்கில் வென்றது. இந்தக் கோலினை எம்.எம்.தஸ்லிம் போட்டார்.

அடுத்து நடந்த யாழ்ப்பாணம், முல்லை மாவட்ட அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்.அணி 3:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. இந்த அணி சார்பாக ஞா.கிறேசியன் 2, த.தசரதன் 1 கோல்களைப் பெற்றனர்.

வவுனியா - கிளிநொச்சி மாவட்டங்களுக்கிடையே மின்னொளியில் நடந்த போட்டியில் இரு அணிகளும் தலா ஒவ்வொரு கோல்களைப் போட்டன. வவுனியா அணி சார்பில் அரவிந்தனும், கிளிநொச்சி அணி சார்பில் வெஸ்லி ரமேஸ்காந்தும் இந்தக் கோல்களைப் போட்டனர்.

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களுக்கிடையேயான வலைப்பந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் 81:11 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்றது.

## விளையாட்டு

### இந்தியாவுடனான போட்டி; பாகிஸ்தான் தேர்வு அணி அறிவிப்பு!

இந்திய கிரிக்கெட் அணி பாகிஸ்தானில் சுற்றுப்பயணம் செய்து 3 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டிகளில் விளையாடவுள்ளது.

முதலில் ஆரம்பமாகும் ஒருநாள் தொடர் அடுத்த மாதம் 13 ஆம் திகதி ஆரம்பமாகிறது. இதைத் தொடர்ந்து மார்ச் 28 ஆம் திகதி டெஸ்ட் தொடர் தொடங்குகிறது.

இந்தியாவுக்கு எதிரான இந்தத் தொடருக்காக பாகிஸ்தான் தேர்வு அணி நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டது.

அதிரடி ஆட்டக்காரரான அப்ரிடி மற்றும் நசீர் ஆகியோர் இந்தத் தேர்வு அணியில் இடம் பெற்றுள்ளனர். சலீம் இலாகி, நவீக்லத்திக் மற்றும் புதுமுக வீரர்களான பாசித்கான், பைசல் இக்பால், ஆசிம்கமால், சபீர் ஆகியோரும் இடம் பெற்றுள்ளனர்.

ஒருநாள் தொடருக்கான பாகிஸ்தான் அணி மார்ச் முதல் வாரத்தில் அறிவிக்கப்படும்.

## திரிணா மூல் காங்கிரஸ் - பாரதீய ஜனதா மேற்கு வங்காளத்தில் தொகுதி உடன்பாடு!

மேற்கு வங்காளத்தில் மம்தா பனர்ஜியின் திரிணாமூல் காங்கிரஸும் பாரதீய ஜனதாவும் கூட்டணி அமைத்துப் போட்டியிடுகின்றன. இந்தக் கூட்டணியில் திரிணாமூல் காங்கிரஸ் 29 தொகுதிகளில் போட்டியிடுகின்றது. பாரதீய ஜனதாவுக்கு 13 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

கடந்த 1999 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தலில் மேற்கு வங்காளத்தில் திரிணாமூல் காங்கிரஸும் பாரதீய ஜனதாவும் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டன. திரிணாமூல் காங்கிரஸ் 9 தொகுதிகளில். வெற்றி பெற்றது. பாரதீய ஜனதா 2 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

அதேபோல் நடைபெற இருக்கும் நாடாளுமன்றத் தேர்தலிலும் இரு கட்சிகளும் கூட்டணி அமைத்து போட்டியிடுகின்றன. இதற்கான உடன்பாடு ஏற்பட்டுள்ளது.

அதன்படி மேற்கு வங்காளத்தில் மொத்தம் உள்ள 42 தொகுதிகளில் 29 தொகுதிகளில் திரிணாமூல் காங்கிரஸ் போட்டியிடுகிறது. மிகுதி 13 தொகுதிகள் பாரதீய ஜனதாவுக்கு ஒதுக்கப்பட்டு உள்ளன.

இந்தத் தகவலை மம்தா பனர்ஜி நேற்று முன்தினம் கொல்கொத்தாவில் நிருபர்களிடம் தெரிவித்தார்.

# மராட்டிய சட்டசபையைக் கலைத்து மக்களவை தேர்தலுடன் நடத்த வேண்டும்

## - பாரதீய ஜனதா கோரிக்கை

(புதுடெல்கி)

மராட்டிய சட்டசபையைக் கலைத்து மக்களவையுடன் சேர்த்து தேர்தல் நடத்தாவிட்டால் பா.ஜ.க. - சிவசேனையைச் சேர்ந்த 124 எம்.எல்.ஏக்களும் ராஜினாமா செய்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் மராட்டிய காங்கிரஸ் கூட்டணி அரசுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது.

மராட்டியத்தில் காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் கூட்டணி ஆட்சி நடக்கிறது. முதல்வராக காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த சுசில் குமார் ஷிண்டே இருக்கிறார். மராட்டிய சட்டசபையின் ஆயுட்காலம் ஒக்ரோபர் மாதம் வரை இருக்கிறது.

ஆந்திரா, கர்நாடகம், ஒரிசா, சிக்கிம் மாநில சட்டசபைகளின் ஆயுட்காலம் முடியும் முன்பே அவற்றைக் கலைத்து மக்களவையுடன் சேர்த்து தேர்தல் நடத்த விரும்பவில்லை.

ஆனால் மராட்டிய மாநில சட்டசபைத் தேர்தலை மக்களவையுடன் சேர்த்து நடத்த வேண்டும் என்று எதிர்க்கட்சியான பா.ஜ - சிவசேனைக் கூட்டணி வற்புறுத்தி வருகிறது.

இதுபற்றி பா.ஜ.க. பொதுச்செயலாளர் பிரமோத் மகாஜன் நேற்று மும்பையில் அளித்த பேட்டியில் கூறியதாவது,

மராட்டிய சட்டசபையைக் கலைத்துவிட்டு மக்களவையுடன் சேர்த்து தேர்தல் நடத்த வேண்டும். அப்படி செய்யாவிட்டால் பா.ஜ.க - சிவசேனை கூட்டணியை சேர்ந்த 124 எம்.எல்.ஏக்களும் கூண்டோடு ராஜினாமா செய்வார்கள்.

மராட்டிய அரசு சுயநலத்தை விட்டுவிட்டு மக்களவைத் தேர்தலுடன் சேர்த்து சட்டசபை தேர்தலை நடத்த வேண்டும்.

காங்கிரஸும் - தேசியவாத காங்கிரஸும் சட்டசபை ஆயுட்காலம் முடியும் வரை பதவி சுகத்தை அனுபவிக்கலாம். ஆனால் நாங்கள் அதில் பங்குபெறமாட்டோம். மக்கள் வரிப் பணத்தை மிச்சப்படுத்துவதற்காக அண்டை மாநிலமான கர்நாடக சட்டசபையை கலைக்கும்போது மராட்டிய சட்டசபையை கலைத்து மக்களவையுடன் ஏன தேர்தல் நடத்தக்கூடாது? எனக் கேள்வி எழுப்பினார்.

மராட்டிய சட்டமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கை 288 ஆகும். இதில் பா.ஜ.க. - சிவசேனை கூட்டணி உறுப்பினர்கள் 124 பேர் உள்ளனர். இவர்களின் இராஜினாமா மிரட்டலால் மராட்டிய கூட்டணி அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

மராட்டிய சட்டசபையைக் கலைக்க வேண்டும் என்ற பா.ஜ.க. - சிவசேனைக் கூட்டணியின் கோரிக்கையை முதல்வர் ஷிண்டே நிராகரித்து விட்டார். மராட்டிய சட்டசபைக்கு ஒக்ரோபர் 5 ஆம் திகதிவரை ஆயுட் கொடுத்து மக்கள் தீர்ப்பளித்துள்ளனர். அப்படி இருக்கும் போது ஏன் சட்டசபையை கலைக்க வேண்டும்?

அது தன் ஆயுள் காலத்தை நிறைவு செய்யும் என்று அவர் கூறினார்.

## மகாஜனா கல்லூரி முதலிடம்

தெல்லிப்பழைக் கோட்டப் பாடசாலை மட்டத்தில் நடைபெற்ற மென்பந்து சுற்றுப் போட்டிகளில் முதலாம் இடத்தை - மகாஜனாக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை யூனியன் கல்லூரியும், மூன்றாம் இடத்தை மல்லாகம் மகாவித்தியாலயமும் பெற்றன. (72)

## மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளது

தென்மராட்சித் தேசிய எழுச்சிப் பேரவையினால் கல்வயல் கிராம அலுவலர் பிரிவிற்குட்பட்ட மீள்குடியமர்ந்த மக்களுக்கு - தோடை, தேசி ஆகிய மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளது.

நாளை செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கல்வயல் புலுட்டையன் பிள்ளையார் ஆலய முன்றலில் வைத்து, இந்த மரக்கன்றுகள் வழங்கப்படவுள்ளன எனவும், குடும்ப அட்டையுடன் வந்து மரக்கன்றுகளைப் பெற்றுக் கொள்ளுமாறு தென்மராட்சித் தேசிய எழுச்சிப்பேரவையினர் கேட்டுள்ளனர். (24)

# பேரினவாத சக்திகளுக்கு துணைபோகாது தேர்தலில் இருந்து ஒதுங்குங்கள்!

## ஆனந்தசங்கரியிடம் கடற்தொழிலாளர் சம்மேளனம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிங்கள பேரினவாத சக்திகளுக்குத் துணைபோகும் துரோக சக்திகளுக்கு பலியாகாது, தமிழ் மக்களின் ஒற்றுமையை நிலைநிறுத்த- வரும் தேர்தலில் போட்டியிடாது ஒதுங்கி நின்று, விட்டுக்கொடுப்புடன் செயற்படுமாறு யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்களின் சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம் இரவு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வீ.ஆனந்த சங்கரியைச் சந்தித்த பின், சம்மேளனம் வெளியிட்ட அறிக்கையில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. சம்மேளனத்தின் செயலாளர் ச.சூரியகுமாரன் அனுப்பி வைத்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது -

தமிழர் போராட்ட வரலாற்றில் இதுவரை 18000 வீரர்களையும், 82000 இற்கும் மேற்பட்ட பொதுமக்களையும் உயிர் ஈகம் செய்து பெரும் அர்ப்பணிப்பின் பின், தமிழர் தேசியத்தைக் கட்டியெழுப்பி, வரலாற்று முக்கியத்துவத்தைத் தமிழர் தரப்பு ஏற்படுத்தியிருக்கும் இந்த வேளையில் - எதிர்வரும் தேர்தலில் தமிழ் தேசிய மக்கள் ஒன்றுபட்டு, ஒரு கொள்கையில் ஒருமித்து நின்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் சார்பாக தமது அரசியல் அபிலாசைகளை சர்வதேச சமூகத்தின் முன்னால் நிலை நிறுத்த முனைத்து நிற்கும் இந்தச் சந்தர்ப்பத்தில் - சிங்கள பேரினவாத சக்திகளும், துணைபோகும் துரோக சக்திகளின் சதி நோக்கங்களுக்கு, தாங்களும் பலியாகாது, தமிழினத்தையும் பலியாக்காது, தமிழர்களின் ஒற்றுமையைக் கெடுக்காது வரும் தேர்தலில் ஒதுங்கி இந்தக் கெடுதல் மிக்க நோக்கில் நின்றும் விலகி தாங்கள் விட்டுக்கொடுக்க வேண்டும். தமிழினம் சார்பாகவும், கடற்தொழிலாளர்களது சார்பாகவும் வேண்டிநிற்கின்றோம்.

இந்தக் கோரிக்கையை ஏற்று செயற்படுத்துவதன்மூலம், தங்களது அரசியல் தார்மீகப் பொறுப்பை வெளிக்காட்டி நிற்பீர்கள் என்பதே எமது நம்பிக்கையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அடிக்கல் நாட்டுவிழா

(மட்டுவில்)

மட்டுவில் வடக்கு சந்திர மௌலீச வித்தியாசாலைக்கு சுவிஸ் நிறுவன அனுசரணையுடன் இரண்டு மாடிகள் கொண்ட வகுப்பறைக் கட்டடத் தொகுதி ஒன்று நிர்மாணிக்கப்படவுள்ளது.

இதற்கான அடிக்கல் நாட்டுவிழா இன்று நண்பகல் 12 மணிக்கு பாடசாலை அதிபர் செ.சிவஞானம் தலைமையில் நடைபெறும். (24)

## மக்களைச் சந்திக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.நகர் கிராம அலுவலர் பிரிவுகளில் வசிக்கும் மக்களை சந்தித்துக் கலந்துரையாட ஏற்பாடு செய்து தருமாறு படையினர் கிராம அலுவலர்களைக் கேட்டுள்ளனர்.

அமைப்புரீதியாகச் செயற்படுவோர் மற்றும் சுதந்திரமாகச் செயற்படுவோரைத் தனித்தனியாக சந்திக்க ஏற்பாடுகளை செய்து தருமாறும் படையினர் கோரியதாக கிராம அலுவலர்கள் தெரிவித்தனர். (111)



சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரன் எழுதிய 'சைவசமய தரிசனம்' நூல் வெளியீட்டு விழா - யாழ்.சைவ பரிபாலன சபை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெற்ற போது, நூலாசிரியருக்கு அகில இலங்கை திருமுறை மன்ற அமைப்பாளர் சீ.கிருஷ்ணமூர்த்தி பொன்னாடை போர்த்தி கௌரவிப்பதைப் படத்தில் காணலாம்

## யாழ்.குடாநாட்டில்

# வாக்காளர் அட்டை விநியோகம்; தபால்மா அதிபர் ஆலோசனை!

எதிர்வரும் ஏப்ரல் 2 ஆம் திகதி நடைபெறவுள்ள பொதுத் தேர்தலுக்கான வாக்காளர் அட்டைகளை, குடாநாட்டில் விநியோகிப்பது தொடர்பான உயர்மட்ட மாநாடு ஒன்று நேற்றுமுன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

இதற்காக நேற்றுமுன்தினம், தபால்மா அதிபர் கே.ஏ.என்.சேனதீர, பிரதி தபால் அதிபர் நாயகம் ஆர்.டி.பி.காமினி ஆகியோர் அடங்கிய உயர்மட்ட குழுவினர் வந்திருந்தனர்.

நேற்றுமுன்தினம் காலை 10 மணிக்கு பிராந்திய தபால் திணைக்களத்தில் நடைபெற்ற இந்தச் சந்திப்பில் வடமாகாண தபால்மா அதிபர் என். ஜெயரட்ணம், பிரதேச தபால் அத்தியட்சகர் எஸ்.சிவராஜ சிங்கம் மற்றும் குடாநாட்டிலுள்ள தபால் அதிபர்களும் கலந்துகொண்டனர்.

இந்த மாநாட்டின்போது, குடாநாட்டில் வாக்காளர் அட்டைகளை விநியோகிப்பது குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

வாக்காளர் அட்டை எதிர்வரும் 15 ஆம் திகதி விமானப்படைக்குச் சொந்தமான விமானம் மூலம் பலாலி விமான நிலையத்துக்கு அதிகாரிகளால் எடுத்துவரப்படும் என்றும், அங்கிருந்து தபால் திணைக்கள அதிகாரி அவற்றைப் பெற்று, உரிய தபால் நிலையங்களுக்கு மறுநாள் அனுப்பிவைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

வாக்காளர் அட்டை விநியோகிக்கப்படும் அனைத்து தபால் நிலையங்களுக்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் எனவும் இந்தச் சந்திப்பில் தெரிவிக்கப்பட்டது.

வாக்காளர் அட்டை 16 ஆம் திகதி முதல் 26 ஆம் திகதி வரை வீடுகளுக்கு எடுத்துச்சென்று விநியோகிப்பது என்றும், பின்னர் தேர்தல் தினம்வரை அலுவலகத்தில் பொது மக்கள் சென்று பெறுவதற்கும் ஏற்பாடுகள் செய்வது குறித்தும் தீர்மானிக்கப்பட்டது.

வாக்காளர் அட்டை விநியோகத்தின் போது ஆட்பற்றாக்குறையை ஈடுசெய்தல், மேலதிக பணிகளை வழங்குதல் மற்றும் பதிவாளர்களை நியமித்தல் என்பது குறித்தும் ஆராயப்பட்டது.

புதிதாக அமைக்கப்படும் பிரதம தபால் நிலையம், சாவகச்சேரி தபால் நிலையம் ஆகியவற்றை திறப்பது குறித்தும் ஆராயப்பட்டது. (202)

## 156 பாடசாலைகள் வடக்கு - கிழக்கில் மூடப்பட்டுள்ளது

வடக்கு - கிழக்கு மாகாணத்திலுள்ள ஆயிரத்து எட்டு பாடசாலைகளில், 156 பாடசாலைகள் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. 144 பாடசாலைகள் இடம்பெயர்ந்து வேறு இடங்களில் இயங்கி வருகிறது என மாகாண கல்வித் திணைக்கள புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த கால போர் நடவடிக்கைகளாலும், உயர்பாதுகாப்பு வலயம் காரணமாகவும், பாடசாலைக்கு அணமையில் இராணுவ முகாம்கள் அமைந்துள்ளதாலும் இந்தப் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன எனத் தெரியவருகிறது. (17)

## பாலைதீவு அந்தோனியார் திருநாள் தினம் மாற்றம்

சரித்திரப் பிரசித்தி பெற்ற பாலைதீவு அந்தோனியார் திருநாள் நடைபெறும் தினங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மார்ச் 11 ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை 4 தினங்கள் விழாக்கள் நடைபெறவுள்ளன.

முன்னர் மார்ச் மாதம் 23 ஆம் திகதி தொடங்குவதாக யாழ்.ஆயர் வட்டாரங்களால் தெரிவிக்கப்பட்டிருந்தது. பாலைதீவு அந்தோனியார் ஆலய பரிபாலன அதிகாரங்களைக் கொண்ட வலைப்பாட்டு அன்னம்மாள் தேவாயலய பங்குச்சபை- சமீபத்தில் பங்குத்தந்தை அருட்திரு றொக் அடிக்களார தலைமையிலான கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது. (206)

## யாழ்.காரைநகர் வீதியில்

# வேகக்குறைப்பு அணையால் நோயாளர்கள் சிரமம்

இராணுவத்தால் வீதியின் குறுக்கே போடப்பட்டுள்ள வேகக் குறைப்பு அணையினால், பொது மக்களும், வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்களும் பல பிரச்சினைகளை எதிர்நோக்கி வருகின்றார்கள்.

யாழ் - காரைநகர் பிரதான வீதியிலுள்ள மூளாய் இராணுவ முகாமுக்கு அண்மையிலேயே இந்த அணைகள் போடப்பட்டுள்ளன.

இதனால், மூளாய் வைத்தியசாலைக்குச் செல்லும் நோயாளர்கள் பெரும் கஷ்டத்ததை எதிர்நோக்கி வருகின்றனர்.

அத்துடன், அவசர சிகிச்சைக்காக வாகனங்களில் ஏற்றிவரும் நோயாளர்கள், இந்தப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள நான்கிற்கு மேற்பட்ட வீதித்தடைகளால் பாதிக்கப்படுகின்றனர். (44)

# தேசிய அடையாள அட்டைகள் இன்னமும் வந்து சேரவில்லை

சென்ற வருடம் இறுதிப் பகுதியில் வந்துசேரவேண்டிய தேசிய அடையாள அட்டைகள் இதுவரை வந்து சேரவில்லை என ஆட்பதிவு திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் ஒக்டோபர், நவம்பர் மாதங்களில் வந்துசேரவேண்டிய அடையாள அட்டைப் பொதிகள் இதுவரையும் வந்து சேரவில்லை. இதற்குப் பின்பு அனுப்பப்பட்ட விண்ணப்பதாரிகளுக்கான அடையாள அட்டைகள் வந்துசேர்ந்துள்ளன. கொழும்பு ஆட்பதிவு திணைக்களத்தினால் தேசிய அடையாள அட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டபோதிலும், இதுவரை யாழ். ஆட்பதிவு திணைக்களத்திற்கு அடையாள அட்டைகள் வந்து சேரவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

# சமூக செயற்பாட்டு மையத்தில் ஒருநாள் பயிற்சிப் பட்டறை

சமூகசேவைகள் திணைக்களத்தால் வடக்கு - கிழக்கு மகாணத்தில் செயற்படுத்தப்படும் திட்டங்களை - வினைத்திறன் மிக்கதாக நடைமுறைப்படுத்தும் முகமாக யுனிசெப் நிறுவனத்தின் அனுசரணையுடன், சமூகசேவைகள் திணைக்களத்தினால் - நாளை காலை 9 மணிதொடக்கம் மாலை 4 மணி வரை 4 ஆம் குறுக்குத்தெரு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சமூக செயற்பாட்டு மையத்தில் ஒரு நாள் பயிற்சிப்பட்டறை நடைபெறவுள்ளது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில் சகல பிரதேச செயலாளர்கள், நன்னடத்தை உத்தியோகத்தர்கள், சிறுவர் மேம்பாட்டு, சமூகசேவை உத்தியோகத்தர்கள், கிராம அபிவிருதத்தி உத்தியோகத்தர்கள், தலைமைக் காரியாலய சமுர்த்தி முகாமையாளர்கள் போன்றோரை கலந்துகொள்ளுமாறு சமூகசேவைகள் திணைக்கள பணிப்பாளர் கோரியுள்ளார்.

பயிற்சிப்பட்டறை நடைபெறும் நாளுக்கான மதிய உணவு , தேநீர் மற்றும் பிரயாணக் கொடுப்பனவுகள் திணைக்களத்தினால் வழங்கப்படும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.(113)

# விஞ்ஞான வினா - விடைப் போட்டியில் இமையாணன் வித்தியாலயம் முதலிடம்

அகில இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தினரால் நடாத்தப்பட்ட தரம் II பாடசாலைக்கிடையிலான விஞ்ஞான வினா - விடைப் போட்டியில் - உடுப்பிட்டி இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலய மாணவர்கள் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளனர்.

பாடசாலை சார்பாக வினா-விடைப் போட்டியில் கொ.கிருஷ்ணப்பிரியா, உ.உதயலோஜினி, கு.நிருஜினி, தெ.ரூபேந்திரா, இ.சுதீபன் ஆகியோரே பங்குபற்றி வெற்றிபெற்றனர். யாழ். இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் வித்தியாலயம் இந்தப் போட்டியில் 2002 ஆம் ஆண்டிலும் முதலாம் இடத்தை பெற்றுகொண்டதும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, இந்த ஆண்டு விஞ்ஞானப் பேச்சுப்போட்டியில் கோ. கிருஷ்ணப்பிரியா 3 ஆம் இடத்தை பெற்றுக்கொண்டார் என இமையாணன் வித்தியாலய அதிபர் ந.சந்திரசேகரம் தெரிவித்தார். (116)

# தென்மராட்சியில் வீடு வீடாக விபரம் திரட்டும் படையினர்

தென்மராட்சியில் சிலபகுதிகளில் படையினர் வீடு வீடாகச் சென்று குடும்ப விபரங்களைத் திரட்டிவருவதாகக் கூறப்படுகிறது.

குறிப்பாக, வரணி மற்றும் அதனையண்டிய பகுதிகளிலேயே படையினர் வீடுகளிலுள்ள குடும்ப விபரங்களைத் திரட்டிவருகின்றனர்.

குடும்பத்தில் எவராவது போராளியாக இருக்கின்றனரா, போராட்டத்தில் இணைந்து மாவீராகி இருக்கின்றனரா என்பன போன்ற விபரங்களையும் படையினர் திரட்டிவருவதாகவும் தெரியவருகிறது.

இதேவேளை, சில பாடசாலைகளிலும் இதுபோன்று, படையினர் விபரங்களைத் திரட்டிவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபரம் திரட்டும் நடவடிக்கையைப் படையினர் ஆரம்பித்துள்ளதையடுத்து இந்தப் பகுதி மக்கள் கலக்கமடைந்திருப்பது குறிப்பிடத்தக்கது.(34)

# வல்லை மயான வீதியில் பெரும் சுகாதார சீர்கேடு

வல்லை பொதுமயானத்திற்குச் செல்லும் வீதியிலும், பொது மயானத்திலும் குப்பை கொட்டப்பட்டு, அசுத்தம் அடைந்து வருவதாக அந்த பகுதி மக்களால் தெரிவிக்கப்படுகின்றது.

வெட்டுத் தகரங்கள், உடைந்த போத்தல்கள், தலைமுடிகள், பழைய முட்கம்பிகள் மற்றும் பல்வேறு கழிவுப்பொருட்கள் இந்தச் சுற்றாடலில் கொண்டுவந்து போடப்படுகின்றன.

ஈமக்கிரியைகளுக்காக இப்பொழுது மயானத்திற்கு செல்லும் கல்லுவம், உடுப்பிட்டி, நாவலடி, ஆலடி பொதுமக்கள் இவற்றால் பாதிப்படைகின்றனர் என்றும், துர்நாற்றம் இந்தப் பகுதியில் வீசுவதால் சுகாதாரம் பாதிக்கப்படுவதாகவும், அதனால் சூழல் மாசடைவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (116)




# அவன் தலை நிமிர்ந்தான்

முருகு.பாரிமகன்



**கோ**பி அந்த நாய்க்குட்டிகளையே இமைவெட்டாது பார்த்துக்கொண்டு இருந்தான்.

நாய் - குட்டி போட்டு சில வாரங்கள் கழிந்து விட்டிருந்தன. குட்டிகளுக்குப் பாதுகாப்பான இடம் தேடித் தேடி தாய்நாய் ஒவ்வொரு இடமாக மாற்றி மாற்றிக் கொண்டிருந்தது. ஆனால், இப்போது அந்தக் குட்டிகள் கண்விழித்து ஊர்ந்து செல்லத் தொடங்கிவிட்டன. ஆனாலும், உணவு உண்ணும் நிலையை இன்னமும் அடையாது இருந்தன. அதனால், பால் குடிப்பதற்குப் போட்டி போட்டன.

தாய்நாய் படுத்திருந்தபடியே குட்டிகள் பாலூட்டப் பரிவுடன் நக்கி நக்கி தன் அன்பை வெளிப்படுத்திக்கொண்டிருந்தது. குட்டிகள் ஒன்றை ஒன்று அதட்டி தள்ளிவிட்டுப் பால்குடிப்பதும் தாயின் மீது ஏறி விளையாடுவதுமாக இருந்தன.

தாய்மையின் உணர்வு வெளிப்பாட்டையும், மகிழ்ச்சியான அந்த அரவணைப்பையும் கண்ணுக்குள் நிலை நிறுத்திக் கொண்ட கோபியின் மனம் புயல் வேகமாக அடிக்க ஆரம்பித்தது.

சிற்றறிவுள்ள இந்தப் பிராணிகளுக்கு எத்தனை பெரிய பாச உணர்வு. எண்ண அலைகள் எழுந்து எழுந்து அவன் மனதில் நாய்க்குட்டிகளாக ஊரத்தொடங்கின.

மண்டையைப் பிய்த்துக்கொண்டு மூளை வெளியே கொட்டி விடுவதுபோல் ஒரு உணர்வு.

அவன் விழிகளில் நீரின் உதயம். கண்களைத் துடைத்துக்கொண்டான்.

தாய் நாய் உறுமியது. அவன் நிமிர்ந்து பார்த்தான். அதற்கு அண்மையில் கடுவன் நாயொன்று முன்னங்கால்களை நீட்டி நெஞ்சின் அடிப்பாகத்தை நிலத்தில் பதித்து பெட்டை நாயைப் பார்த்தபடியே உறுமியது.

இரண்டு நாய்களும் ஏதோ பேசிக்கொண்டன.

குட்டிகளும் மெல்ல கடுவன் நாயைப்பார்த்து ஏதோ சொல்லிக்கொண்டன.

கடுவன் அந்த இடத்தைவிட்டு எழுந்து போனது.

அதுதான் குட்டிகளின் தகப்பனோ?

அதற்குக் குட்டிகளில் மட்டும் பாசம் இல்லையோ?

கோபி தன்னைக் குழப்பிக்கொண்டான்.

மனித குலத்திலும் இப்படி வாழ்பவர்கள் இருக்கிறார்கள் தானே.

பெண்கள் - குழந்தைபெறும் இயந்திரம் மட்டும்தானா? குழந்தைகளின் பாரத்தை அவர்கள் சுமக்க வேண்டுமென்பது விதியா?

தன் தந்தையையும் கண்முன்னே நிறுத்தினான்.

ஆறு சகோதரர்களில் மூத்தவன் கோபி அவனுக்குக் கீழே ஐந்துபேர்.

அவர்களையெல்லாம் வளர்த்தெடுத்த தந்தை எவ்வளவு துன்பங்களைச் சுமந்திருப்பார் என்பதை அவன் நினைத்துப்பார்த்தான். தாயின் பிடிவாதம்தான் இப்படி அவரை மனம் மாற வைத்திருக்கவேண்டும் என்றும் அவன் எண்ணியதும் உண்டு.

அவர்களின் இளமைக்கால உணர்வுகளைப் பற்றி அவனுக்கு என்ன தெரியும்.

தாயார் முன்னர் வேறொரு திருமணம் செய்து வாழ்ந்ததும், அந்த மணவாழ்வு முறிந்து கோபியின் அப்பா காதல் உறவு கொண்டதும், பின்னர் ஏற்பட்ட பிரச்சினைகளுக்கெல்லாம் முகம் கொடுத்து தாயை மறுமணம் புரிந்துகொண்டு தனது வீட்டிற்கு அழைத்து வந்ததும், தனிவாழ்க்கையைத் தொடங்கி மகிழ்ச்சியாக வாழ்ந்ததும், அவனுக்குத் தெரிந்திருக்க நியாயம் இல்லைத்தான். ஆனால், இப்போது குடும்பச் சண்டை முற்றிவிடும்போதெல்லாம், தந்தையார் தன் ஆத்திரத்தைக் கொட்டித்தீர்க்கும் வார்த்தைகளில் இந்த வரலாற்று உண்மைகள் வெளியே வந்துவிடும்.

அப்போதுதான் அவனால் புரிந்துகொள்ளமுடிந்தது.

அவர் கடும் உழைப்பாளி, படித்தவர். அரச ஊழியத்தை தேடிக்கொள்ள, இருந்த வாய்ப்பை உதறித்தள்ளிவிட்டு, சுதந்திரமாகத் தொழில்செய்ய விரும்பியவர். விவசாயத்தை தனது தொழிலாகக் கொண்டார். மற்றவர்களின் வாழ்க்கைக்கும் வழிகாட்டியாகச் சமூகத்தொண்டனாக விளங்கியவர்.

மற்றவர்களின் பிணக்குகளை, முரண்பாடுகளை எல்லாம் தீர்த்தவர். நல்ல சிந்தனையோடு குடும்பத்தில் அக்கறை காட்டியவர். பக்கத்திலிருந்து பாடம் சொல்லிக்கொடுத்தவர், ஊக்கப்படுத்தியவர் - இப்படி மாறிவிட்டாரே என்பதுதான் அவனின் கவலையாகவும், ஏக்கமாகவும் இருந்தது.

முரண்பாடுகளைச் சரியாகக் கையாளும் திறமைவாய்ந்த அவரால், தனது குடும்பத்தை முரண்பாட்டிலிருந்து காப்பாற்ற முடியாமல் போனது வியப்புக்குரியதாக இருந்தது.

இந்தப் பிளவுக்கான அடிப்படைக் காரணத்தை கோபியால் அறியமுடியாமல் இருந்தது.

குடும்பத்தில் ஏற்பட்ட வறுமை நிலைதான் இதற்குக் காரணம் என எண்ணித்தான், தந்தை விரும்பாதபோதும் உறவினர் சிலரின் உதவியுடன் கோபி ஒரு அரபு நாட்டுக்குச் சென்று, சில வருடங்கள் கடுமையாக உழைத்தான். ஆனாலும், அவன் எதிர்பார்த்தபடி எந்த மாற்றமும் நிகழவில்லை.

அனுப்பும் பணத்தைத் தந்தையார் அநியாயமாகச் செலவு செய்து தங்களைப் பட்டினி போடுவதாகத் தாயார் குறைப்பட்டுக்கொள்வது வழமையாகிவிட்டது.

வந்த கடிதங்களை வாசித்து வாசித்து இதயத்தின் பாரத்தை இறக்கிவைப்பதற்காக அவன் அழுது தீர்க்கவேண்டியிருந்தது. இந்த நிலையிலதான் அவன் தன் தம்பி ஒருவனை தனது இடத்திற்கு அழைத்துவிட்டு, தான் வீட்டுக்குத் திரும்பினான்.

வறுமையின் கொடுமையிலும் கொழுந்தெறிந்து படருவதற்கே கொழுகொம்பு தேடிய அந்தக் கொழுந்துகளைத் தட்டி நிலத்திலே படரவிட்ட தந்தையாரின் கொடூரங்களும், தான் தோன்றித்தனமான செயற்பாடுகளும் அந்தப் பிஞ்சு உள்ளங்களை முட்களாய்க் குத்திக் குடையும் போதெல்லாம், அவர்கள் மௌனமாகவே இருந்துகொண்டார்கள்.

இந்த நிலைமையையே அவனால் காண முடிந்தது.

தன்னால் தலைநிமிர முடியாதிருந்த போதிலும, அவன் தன் வியர்வையை நிலத்தில் சிந்தினான். அதளபாதாளத்தில் திணறிக்கொண்டிருக்கும் குடும்பத்தின் அத்திவாரத்தை சரியாக, இறுக்கமாகப் போட்டு எழுப்பிவிடவேண்டும் என்ற அவனது அவாவுக்கு எப்போதும் தடைக்கல்லாக இருக்கும் தந்தையாரை ஒரு வழிக்குக் கொண்டுவர அவனால் முடியவில்லை.

எதிர்நீச்சல் அடிக்க வேண்டியிருந்தது.

பெற்று வளர்த்து தம்மை உருவாக்கிவிட்டவர் என்ற உயர்ந்தநோக்கு அவர்மீது ஒரு பறறுதலை வைத்திருந்ததால், அவன் மனம் எரிந்துகொண்டிருக்கும்போது அதைக் கொழுந்து விட்டெரியவிட அவனுக்குத் திராணி இல்லை.

அவன் மௌனமாக, மௌனமாக - வேதனைகளும், சோதனைகளும் விசாலமாகத் தொடங்கின.

தாய்க்கும், தகப்பனுக்கும் ஏற்பட்ட விரிசல் - தங்களின் வாழக்கையில் பெரும் பாதிப்பை உண்டுபண்ணப் போவதை அவர்களால் புரிந்துகொள்ள முடியவில்லையே என்ற ஆதங்கம் அவனுக்கு...

அடிப்படை காரணத்தை அவனால் அறிந்துகொள்ள முடியவில்லை.

தாயார் தனது உறவுகளை முதன்மைப்படுத்துவதும், அவர்களுடன் சேர்ந்து வாழ விரும்புவதும் அவனுக்கு விளங்காமல் இல்லை.

ஒரு நாள் இரவு எல்லோரும் தூங்கி வழிந்துகொண்டிருந்தார்கள். தலைக்கேறிய போதையில் தள்ளாடிக்கொண்டு வந்த தந்தையார் போட்ட அட்டகாசத்தில் எல்லோரும் விழித்துக் கொண்டார்கள்.

விழிகள் பிதுங்க ஒவ்வொரு மூலையிலும் பதுங்கிக்கொண்டிருந்தனர். கோபி மட்டும் தனது இடத்திலிருந்து எல்லாவற்றையும் அவதானித்துக்கொண்டிருந்தான்.

பெரியவள் தாயுடன் ஒட்டிக்கொண்டிருந்தாள். அவளுக்கும் வயது... 25. ‘டே எல்லோரும் வெளியில வா...’ ‘முத்தத்திலை முழங்காலிலை இரு...’

எல்லோரும் நடுங்கிக்கொண்டிருந்தனர்.

‘கள்ள நாயே உனக்குத் திமிரோடி’

தாயின் கூந்தல் அவரின் கையில் சிக்கியிருந்தது. ‘ஆ... ஐயோ என்ரை அம்மா... நான் சாகிறன்.’ அம்மாவின் குரல் லேசாக அடங்கிப்போனது. அவள் பேசத்திராணியற்றுக் கிடந்தாள். ‘அப்பா - அம்மாவை அடியாதையுங்கோ அவ... பாவம்...’ மூத்தமகள் அவர் கால்களைப் பிடித்துக்கொண்டு கெஞ்சினாள்.

‘போடி நீ... என்னோடை சரிவரக் கதைக்க வெளிக்கிட்டியோ?’ அவர் காலை உதறினார். அந்தப் பிஞ்சு நிலத்தில் உருண்டு சுருண்டது. இதுவரையும் பொறுமையோடு பார்த்துக்கொண்டிருந்த கோபி, தாயும் தங்கையும் படும் வேதனையைத் தாங்கிக் கொள்ளமாட்டாமல் எழும்பி நிமிர்ந்தான். அப்பா என்னை அடியுங்கோ, அதுகளுக்கு அடியாதையுங்கோ அவன் நடுவில் நின்றபடி தந்தையாரிடம் கெஞ்சிக் கேட்டான்.

‘இவர் பெரிய இவர் தரகுக்கு வந்திட்டார். போடா நாயே நீயும் போய் அதிலை இரு... இவளவையோட கதைச்சுப்போட்டு வாறன் போடா போ’

அவன் தோளுக்கு மேல் வளர்ந்துவிட்டான். இனி அவனுக்கு கைவைப்பது... அவர் கோபியை அதட்டினார். அவன் அசைவில்லை, மருளவும் இல்லை, மிரளவும் இல்லை. ‘என்னடா முறைக்கிறாய்’. ‘அப்பா...’ அவன் எதையோ சொல்லத் துடித்தான். தந்தை என்டதால் அவனது நாக்கு இறுகிக்கொண்டது.

‘டேய் உன்ரை உழைப்பிலை வாழுறன் என்டே நினைக்கிறாய். அது என்னிலை வாயாது. நீங்கள் வளரவேணும் என்று என்ரை உடல் பட்டபாடு எனக்குத்தான் தெரியும்.’

‘ஓமப்பா அதுக்காக இப்ப கொடுமைப்படுத்துறதே’

கோபி வாயைத் திறந்து மூடுமுன் அவன் கன்னம் பளீரெண்டது. கன்னத்தைப் பொத்தியபடியே முத்தத்தில் தன் மற்றச் சகோதரர்களுடன் வந்து அமர்ந்துகொண்டவன் - விக்கி விக்கி அழுது தீர்த்தான்.

ஆனாலும், அவன் தன்னைத் திடப்படுத்திக்கொண்டு எழுந்து தந்தையின் அருகிலே மன்றாடிக்கொண்டுநின்றான்.

கோபத்தால் கொதிக்கும் தந்தையைச் சமாதானப்படுத்தி, மற்ற இருவரையும் தாக்காத வகையில் பாதுகாத்துக்கொண்டான் கோபி. ஆனாலும், நிலைமை முழுவதும் மாறியிருந்தது.

கோபத்தால் நிலைகுலைந்திருந்த தந்தை எல்லோரையும் வீட்டைவிட்டு வெளியேறும்படி உத்தரவிட்டார்.

இல்லையென்றால் இங்கு இரண்டு கொலைகள் விழும் என கோபாவேசமாக எச்சரித்தார்.

அதற்குமேல் அங்கு நிற்பதில் யாருக்கும் துணிவில்லை. எல்லோரும் கதறி அழுதபடி வெளியேறினார்கள்.

அந்த இரவு அவர்களின் உறவைத் துண்டித்துவிட்டது. கோபியின் கண்கள் - அந்த நாயையும், நாய்க்குட்டிகளையும் மீண்டும் நோக்கியிருந்தது. நாய் - குட்டிகளை விட்டு விலகிச்சென்று கொண்டிருந்தது.

அதையே பார்த்துக் கொண்டிருந்த கோபி, முதன்முறையாகப் பெருமூச்செறிந்தான். இத்தனை துன்பங்களையும் தாங்கிக்கொண்டு தந்தையின் எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல், புதிய காணி வாங்கி, வீடு கட்டி, இனியாவது சேர்ந்து வாழ்வோம் என அவன் கண்ட கனவு- நிஜமாகத் தொடர்ந்தபோது - தாயாரின் முடிவு அவனை அதிரவைத்தது. தாயார் தன உறவுகளுடன் சேர்ந்து கொள்ள முடிவு செய்ததும், தந்தை அநாதைபோல் அடுத்தவர் வீட்டில் வாழ்வதும் அவனை வருத்தியது.

அவன் தாயாரைக் கடிந்துகொண்டான்.

‘போங்கோ எல்லோரும் எங்களை விட்டுப்போங்கோ. என்ரை உயிர் இருக்கும் வரை என்ரை சகோதரர்களை நான் காப்பாற்றுவேன்.’

அவன் எழுந்து நிமிர்ந்தான்.

---

## ஹைக்கூ

முக்கடல்
இருதுளி
திருக்குறள்...

* * *

நூற்று முப்பத்து மூன்று X பத்து
பெருக்கப் பெருக்க
பெருகும் வாழ்வு

* * * *

தமிழின்
நீண்ட பயணம்
இரட்டையடிப்பாதை

* * *

தமிழ்ப்பால்
சுண்டக்காய்ச்ச
கிடைத்தது ஏடு

* * *

ஊரை ஊற்றி ஊற்றிப்
பார்த்தும்
புளிக்காதபால்

* * * *

இரண்டிரண்டாய் அலைகள்
குறளோசை
வள்ளுவத்தல் பார்கடல்

* * * *

இரண்டு அடி கொடுத்தால் தான்
திருந்துவாய்
வாங்கிக் கொள் வள்ளுவனிடம்

* * * *

தந்தை தந்த
தாய்ப் பால்
முப்பால்



- மதியழகன்-

# இப்படியும் ஒரு 'மனசு'

பாக்கியமக்காவை அடிக்கடி நான் சந்திப்பதுண்டு.

என்ன கௌ்ணேன்ரை கடைசிப் பெடியன் வந்தவனாம் பிறகென்ன உங்கடை பாடு பரவாயில்லை என்றேன் நான்.

அவவின் முகம் கறுத்து, விழிகளில் கண்ணீர்த்துளி முளைகட்டி உடையத் தயாரான நிலைகண்டு நான் என் முகத்தை வேறு பக்கம் திருப்பிக்கொண்டேன்.

அவாவின் குடும்பத் தன்மைகள் பற்றியும் அவா எனக்குச் சொன்னதையும் நீங்களும் அறிந்திருக்க வேணுமென்பது என் பெருவிருப்பம்.

அவர்களில் மூன்று சகோதரர்கள். ஒரு அண்ணன் இருதங்கைகள். அண்ணனின் ஏழு பிள்ளைகளில் ஐவர் வெளிநாடுகளில் தங்கைகள் இருவருக்கும் தலா ஐந்து பிள்ளைகள்.

ஒரு தங்கையின் பிள்ளைகளில் முப்பது வயது கடந்த முதிர் கன்னிகள் இருவர். இருவரது பிள்ளைகளிலும் ஒருவரையேனும் வெளிநாட்டில் கூப்பிட்டுவிட ஐவரில் ஒருவரேனும் முன்வரவில்லை.

இரண்டு குடும்பங்களையும் வறுமைப் பேய் அவ்வப்போது சீண்டும், பிடித்திழுக்கும், சீர் நிறையற்ற வீடுகள்.

தமையனின் இளைய மகன் அண்மையில் மனைவி சகிதம் ஏதோ மிக அவசர தேவையாக தன் வீட்டிற்கு வந்திருந்தான். அத்தைமாருக்கு ஒரு சதமேனும் கொடுக்கவில்லையாம்.

அவசரமாக வந்ததால் வெறும் கையுடன் வந்ததாக காரணம் கூறப்பட்டது.

ஆனால், வெளிநாடு திரும்பிச் செல்கையில் தனது மனைவிக்கு கொழும்பில் எடுத்த உடு பிடவைகளின் மொத்தப் பெறுமதி என்ன தெரியுமா? நாற்பதாயிரம் ரூபா.

சுதன்.

# பூப்பூக்கும் புல்ன்கள்...

இருள் உதிரும்.அதிகாலை —எங்கும்
இடி, மின்னல் கலங்களுடன்
மகரந்தம் கோர்த்த வானம்...!
இழைகளின் அக்கினி வேட்டுக்களுக்கு
அடம்பிடித்து உளம் குதூகலிக்கும்
நிறமூர்த்த வானவில்....
இதழ்களின் வாயிலின் எச்சமுடன்
இறுமாப்புடன் பொழியும்
தேன்துளியின் மழைத்தூறல்கள்...
அனைத்தும் பூப்பூக்கும் புலன்களால்...!

பரந்த புல்வெளிகள் — எங்கணும்
பசுஞ்சோலைக்காட்சிகள்...
ஓரிரு மரங்கள் நடுவே
பாடிப்பிறந்த மனிதர்களாய்
பகலிரவை புகட்டும்
வானுயர் பனை மரம்...
உப்பு நீரின் உதிரத்தால்
ஊற்றி வளர்த்த உடலுக்கு
உணவு கொடுத்த உறவுகள்...
எல்லாமே பல்குழலின்
வெகுடித் தனங்களில் எம் விருப்பு வெறுப்பாய்...!

நிழலாய் நிஜப்படுத்தி
நிறுத்தி வைத்த நினைவுகள் — யாவும்
காற்றோடு கலைந்து செல்லும்.
கருமேகக் கூட்டமாய் என்னுள்...
சுரமூட்டும் நிறப்பொழுதுகளின்
உரப்பேறுகள் எல்லாம்
உதிர்ந்து விழும் பூக்களில்
சருகாய் சலனமிடுதே...!

- என்.பிரேமசீலன்

# ஏன் இருக்கின்றார்கள்?...

ஆனையிறவு முருகேசனுக்கு உறவுகள் யாருமில்லை. இரண்டு மகன்மார் மட்டும் ஜேர்மனியில் இருக்கின்றார்கள். முருகேசன் யாழ்ப்பாணத்தில் ஒரு வீட்டில் வாடகைக்கு வசித்துவந்தான். வெளிநாட்டில் இருந்து பணம் வருவதால் முருகேசனின் வாழ்வு நல்லபடியாக நகர்ந்தது.

திடீரென என்ன எதுவென சொல்லாமல் கொள்ளாமல் இறந்துவிட்டார். முருகேசன் இருந்த வீட்டுக்காரர் அழவேயில்லை. அப்பாடா... ஒரு மாதிரி இந்தப் பழசு போய்ச்சேர்ந்துவிட்டது என்று சந்தோஷப்பட்டார்கள்.

வீட்டின் நடு அறையில் மேசையின் மீது வெள்ளைத துணியை விரிதது அதன்மேல் முருகேசனின் இறந்த உடலை வைத்துவிட்டு, செத்த வீட்டிற்கு ஆயத்தம் செய்தார்கள். ஊருக்குச சொன்னார்கள். வெளிநாட்டில் இருக்கின்ற இரண்டு மகன்களுக்கும் செய்தி அனுப்பினார்கள். மகன்கள் வரும்வரை முருகேசனின் உடல் காத்திருந்தது.

அதற்கிடையில், முருகேசனின் முன்னைய நாள் நண்பர் ஒருவர் கேள்விப்பட்டு ஓடிவந்து பல வேலைகளில் இறங்கினார். அதாவது, பந்தல் அமைத்தல், தோரணம் கட்டுதல், கதிரைகளினை வாடகைக்கு எடுத்து, வருபவர்களுக்கு உட்கார இடம் கொடுத்தல் இப்படியான வேலைகளை செய்தவண்ணம் இருந்தார்.

முருகேசனின் உடலைப் பார்த்து வருபவர்கள், செத்த உடலைப் பார்த்துவிட்டு கண்ணீர் வராத கண்களைக் கசக்கிவிட்டு கூட்டத்தின் மத்தியல் ஓரமாகப் போய உட்கார்ந்து ஊர்க்கதைகளைப் பலரும் பல மாதிரி 'கதைத்துக்கொண்டிருந்தனர். மூன்றாம்நாள் கழிந்ததும். இரு மகன்களும் வந்தார்கள். வீட்டின் வாசலில் ஏறும்போது எல்லோரும் அழுதார்கள். வீதியால் சென்று கொண்டிருந்த ஒருவர் கேட்டார் யார் செத்தது?

செல்வம்.

# தேர்தல்!

வீட்டு வாசலில்
மிதிவெடி கவனம்.
உள்ளே
பட்ட மரத்தின் கீழ்
ஓட்டை
குடிசை வீட்டில்
வசிக்கும்
கூன் விழுந்த கிழவன்
பயந்தது கூடுதலாக
தேர்தலில்!

வரிசையில் நின்று
வோட்டுப் போட்டு
கூடுதலாக வாக்குப் பெற்று
தெரிவு செய்து
அமைச்சர்களாய் வந்தபின்புதான்
வெறுமையான
வாக்குப் பெட்டி!

எந்தச் சின்னத்தின்
கீழ்
போட்டியிடுவது,
சன்னம்
துளைத்த பகுதிகளாய்
பல வீடுகள்
ஒன்றைத் தெரிவு
செய்யுங்கள்!



இரு கைகளையும்
உயர்த்தி
கும்பிடு போட்டு,
வீதிகளிலும் வீடுகளிலும்
பவனி
வரவேண்டாம் -
நாங்கள் வருவோம்
உங்களின்
வாக்குச் சா... வடி தேடி!

நம்பிக்கையாய் தெரியும்
வோட்டு வாங்கும் மட்டும்
கோபம்
கொள்ளமாட்டார்கள்
எங்களிடம் .
அநியாயமாய் போன
வோட்டுக்கு மட்டும்
கோபம்
வரமாட்டேங்குது!

நீயா நானா
என்று
தேர்தலில் நின்று,
வோட்டு விகிதாசாரத்தில்
முதலிடம் வந்தவர்களிடம்,
நாங்கள்
போட்டி போட வேண்டிய
தேவையுள்ளது.

செல்வா.

# அவளுக்கு... கல்யாணமாகிவிட்டது



'உன்காதலியைக் காட்டு'
என்று அவன் கேட்டான்
கல்யாணமாகிவிட்டது என்று சொன்னேன்.

'விருதுகள், பதவியுயர்வுகள் பல
அவளைத் தேடி வந்தன என்று சொல்லியிருக்கிறாய்...
அவள் அறிவுப் பெட்டகமாகத்தான் இருக்க வேண்டும்
அதனாலேயே அவளைப்பார்க்கவேண்டும்' என்று
அவன் கேட்டான்
கல்யாணமாகிவிட்டது என்று மீண்டும் நான் சொன்னேன்.

'என்றென்றும் மாறாத நேசம் செலுத்துபவளாக
அவள் இருக்கிறாள் என்று நீ சொல்லும் போது,
அந்த அன்புத் திருவுருவத்தை பார்க்க வேண்டும் போலிருக்கிறது.'
என்று அவன் சொன்னான்...
'அவளுக்கு கல்யாணமாகிவிட்டது' என்று நான் சொன்னேன்

'உங்கள் காதலை வீழ்த்துவதற்கு
எதிரிகளின் பிரயத்தனம் எக்கச்சக்கமாய் இருந்தது.
என்று நீ சொல்லும் போது, கண்டிப்பாக அவள்
அழகு தேவதையாகத்தான் இருக்க வேண்டும்
ஒரே ஒரு முறை அவளை நான் பார்க்கக் கூடாதா?'
என்று அவன் கேட்டான்...
நான் சொன்னேன்...
'மன்னிக்கவும் அவளுக்கு கல்யாணமாகிவிட்டது' என்று

- பால்நிலவன்-

அரசியல் - கனகரவி -

# தமிழ் மக்களிடையே கேள்விக்குள்ளான ஜனாதிபதி சந்திரிகாவின் நடவடிக்கைகள்



இலங்கையின் தேர்தல் வரலாற்றில் தேசத்தைக் கருத்திலெடுக்காத தேசம் பற்றி அக்கறை கொள்ளாத செயற்பாடுகளை இன்று இலங்கை வாழ் மக்கள் காண்கின்றனர். இதற்கான காரணம் நாட்டில் நிரந்தரத் தீர்வொன்றை காண்பதற்குத் தடையாக இருக்கும் அரசியலமைப்புச் சட்டம்தான் என்பதை ஆணித்தரமாகக் கூறலாம். இந்த மோசமான சட்டம் தமிழர் தாயகத்தை மட்டுமல்ல, சிங்கள தேசத்தையும் பொருளாதார ரீதியாகப் பாதிப்படைய வைக்கக்கூடியதென்பதையும் மக்கள் கவனத்திலெடுக்கவேண்டும். தேர்தலுக்கும், அரசியலமைப்புச் சட்டத்திற்கும், பொருளாதாரத்துக்கும் எவ்வாறான தொடர்பு உள்ளது என்று யாருக்காவது கேள்வியொன்று எழலாம். தொடர்புள்ளதென்பதை சற்று விரிவாகப் பார்ப்போம்.

நான்கு ஆண்டுகளுக்குள் இலங்கை மூன்றாவது பொதுத்தேர்தலைச் சந்திக்கின்றதென்றால், அதற்கான காரணம் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி, அரசியலமைப்புச் சட்டம் என்பனவேதான்.

இந்தச் சட்டத்தை வைத்து நடத்த முற்படும் தேர்தல் கட்சிகளின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டதாகவுள்ளது. இதனால் காலத்திற்கு முந்தி நாடாளுமன்றத்தைக் கலைத்து அடுத்தடுத்து தேர்தலை கொண்டு வரும்போது பெருமளவான நிதி விரயமாகின்றது. ஏற்கனவே போரைத் தீவிரமாக நடத்தி, நாட்டின் பொருளாதாரத்தை சிதைத்தவர்கள் நாட்டின் பொருளாதாரம் பெரும் வீழ்ச்சிக்கு வந்த நிலையில் தேர்தலின் மூலமாகவும் பொருளாதாரத்தில் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்றனர்.

தனதும், கட்சியினதும் நலனையும், தேவையையும் மட்டுமே கருத்திலெடுக்கும் ஜனாதிபதி - தனது காலத்தில் ஏராளமான சாதனைகளை நாட்டு மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் செய்து முடித்துள்ளார். சமாதானம் என்ற நாமத்துடன் பெரும் பரபரப்பாக 1994 ஆம் ஆண்டு அரசின் உயர் பதவியை அலங்கரித்தவரின் சுவரொட்டியில் காணப்பட்ட சந்திரிகாவின் புகைப்படத்தில் நெற்றிப் பொட்டு வைக்குமளவுக்கு சமாதான தேவதையாக மனங்களை நிறைத்தார்.

எமது பிரதேசத்தில் சந்திரிகா சேலை, சந்திரிகா பை, சந்திரிகா சட்டி, சந்திரிகா முட்டி... என்றெல்லாம் கேட்குமளவுக்கு சந்திரிகாவின் பெயர் தமிழர் தாயகப் பிரதேசமெங்கும் பிரபலமானது. சமாதான தேவதையாக எம்முன் தோன்றியவரின்... வெண்புறாவையும், வெண்தாமரையையும் தாங்கி நின்றவரின் சுயம் அவர் பதவியை பொறுப்பேற்ற சில நாட்களிலேயே வெளிப்படையானது. வெண்புறாவை குருதி சிந்தவைத்தார், வெண்தாமரையை செந்தாமரையாக்கினார். சமாதான தேவதை கோர தாண்டவமாடியது. இதனை நாம் சூரியக்கதிர் தொடக்கம் தீச்சுவாலை வரை காணலாம்.

**அரசின் உயர் பதவியை அலங்கரித்தவரின் சுவரொட்டியில் காணப்பட்ட சந்திரிகாவின் புகைப் படத்தில் நெற்றிப் பொட்டு வைக்குமளவுக்கு சமாதான தேவதையாக மனங்களை நிறைத்தார்.**

உலகின் பல்வேறு நாடுகளின் உதவியுடனும், பேரினவாதத்துக்கான ஆதரவுக் குரலுடனும் போரை நிறுத்த வந்தவர் போரை மிகவும் தீவிரமாக நடத்தினார். இதனால் கண்டதென்ன என்பதை சொல்லியறிய வேண்டிய தேவையில்லை எனலாம். ஆகவே, அதனை விரிவாக நோக்குவதில் ஏனைய சில விடயங்களைத் தெளிவுபடுத்திக்கொள்வது அல்லது நினைவுபடுத்திக்கொள்வது தேவையானதாகவே தெரிகிறது.

திடீர் தேர்தல் ஒன்று வந்துவிட்டதே என இன்று பலரும் பேசிக்கொள்கின்றனர். ஆனால், இதனைத் திடீர் தேர்தல் என்று வர்ணிக்க முடியாது. ஜனாதிபதி ஒரு கட்சியைச் சேர்ந்தவராகவும், நாடாளுமன்றம் இன்னொரு கட்சியிடமும் என சிக்கலான அரசியல் நிலைவரம் ஒன்று தோற்றம் பெற்ற நாள் முதல் எப்போது ஓராண்டு முடியும் நாடாளுமன்றம் கலைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டதுதான். அமைதி, சமாதானம் நாட்டு மக்கள் என எதனையும் பாராமல் தன்னால் இறுதியாக எதனைச் செய்யமுடியுமோ அதனை செய்தவராகவே நாடாளுமன்றத்தைக் கலைத்தார் ஜனாதிபதி.

ஆகவே, எதிர்பார்க்கப்பட்ட ஒன்றான இதனை செய்வதற்கு காரணங்களைத் தேடி அலைந்தார். யாரிடமாவது ஆலோசனையைக் கேட்டாரோ தெரியவில்லை, நாடாளுமன்றத்தைக் கலைத்தார். தேர்தலுக்கான நாளைக் குறித்தார். நாடாளுமன்றம் கலைக்கப்பட்டாலும் தேர்தல் முடியும்வரை அமைச்சுப் பதவிகள் அப்படியே இருக்கும். இதற்குள்ளும் கை வைத்தார் - பல அமைச்சுப் பதவிகளைப் பறித்தார். இதற்கு இவர் சொன்ன காரணம் பணம் விரயமாகின்றதாம். பணத்தை மீதப்படுத்தவே இந்த அமைச்சுப் பதவிகளைப் பறித்ததாக...

உண்மை என்னவென்றால், தேர்தல் பரப்புரைகளுக்காக பதவிகள் பயன்பட்டு போகும் என்பதனால் அதனைத் தடுப்பதற்கு தனது பதவியைப் பயன்படுத்துகிறார் ஜனாதிபதி. இது திடீரென்ற நடவடிக்கை. இதுபோன்ற இன்னுமொன்றைச் சொல்லலாம். அரச பதவிகளை வழங்கவோ, பதவி உயர்வை மேற்கொள்ளவோ தடைபோடப்பட்டது. இதுவும் திடீர் நடவடிக்கைதான்.

இவையெல்லாம் தமது அரசியல் நலனை மட்டுமே கவனத்தில் கொண்ட செயற்பாடுகளாகும். இதில் என்ன வேடிக்கையென்றால் தாங்கள் என்ன செய்கின்றோம் என்பதை நியாயப்படுத்த மீண்டும் சமாதான தேவதையாக சந்திரிகா முகம் மாற்றத் தொடங்கியதுதான்.

இப்பொழுது இரகசியமாகப் பேசுகின்றோம். இனி வெளிப்படையாக விடுதலைப் புலிகளுடன் பேசுவோம் என்றெல்லாம் சொல்ல முற்படுவது தங்களது அரசியல் லாபத்துக்காக சமாதானம் ஊறுகாயாக்கப்படுகின்றது. இடைக்கிடை சமாதானத்தைத் தொட்டுக்கொள்ளகின்றனர்.

தமிழருக்கு நிரந்தரத் தீர்வொன்றை தரமுடியாத அரசியலமைப்பு சட்டத்திற்குள் அடங்கும் இலங்கை அரசு - தான் குழப்பங்களை ஏற்படுத்துவதோடு மட்டுமல்லாமல், மக்களை படுமோசமான நிலைக்குள் தள்ளிவிடுகின்றனர். இதில் மக்கள் விழிப்படையவில்லையென்றால் அமைதி, சமாதானம் எட்டாக்கனி என்று சொல்வதை மெய்யாக்கிவிடப் போகின்றனர்.

நாட்டில் நிரந்தரத் தீர்வொன்று அவசியமானது. பேசித் தீர்க்கப் போகின்றனரா அல்லது போராடி ஏற்படுத்தப் போகின்றனரா என்பது மிகப் பாரிய கேள்வியாகும். ஒன்றுமட்டும் உண்மை. எவர் என்ன சொன்னாலும், செய்தாலும் தமிழரை நீண்டகாலத்துக்கு ஏமாற்ற முடியாது. தமிழரின் தலைமையின் பொறுமை காப்பு போராட்டத்தின் தியாகமாகவே நோக்கப்படுகின்றது.

இதனைத் தவறாக கருத்திலெடுப்பதன் மூலம் - மீண்டும் இந்த நாட்டில் எவருமே விரும்பாத போரைக் கொண்டுவர தூண்டுகோலாக அமையாமலிருப்பது அரசியல் தலைமைகளின் கடமையாகும். கடமை தவறினால் கடமை தவறாமலிருப்பவர்கள் தமது கடமையைச் செய்யவேண்டியேற்பட்டால், அனைத்துலக சமூகம் அதனைச் சரியான முறையில் கவனத்திலெடுக்கவேண்டும்.

தமது நலனுக்காக அதிகாரங்களைப் பயன்படுத்துகின்றவர்கள் - வரலாற்றின் வடுக்கள், துன்பங்கள் அந்த வடுக்களை ஏனோதானோ என விடுவார்களானால், அந்த வடுக்களையும், துன்பங்களையும் மக்களே சுமக்கப் போகின்றனர். தெற்கு அரசியலுக்குள்ளிருக்கும் நிலைவரங்களை ஆராய்வதனால், தமிழர் தாயகத்தின் நிலைப்பாடும், சிங்கள தேசத்துக்கும் இடையிலுள்ள ஏராளமான வேறுபாடுகள் உள்ளமை புலனாகும்.

யாருமே விரும்பாத அரசியல் நிலைவரங்களைத் தோற்றுவித்து பெரும் பரபரப்பை ஏற்படுத்தும் - ஏற்படுத்திக் கொண்டிருக்கும் ஜனாதிபதி வரலாற்றின் மீள்பார்வைக்குட்படுத்தும் போது அவரால் ஏற்படுத்தப்பட்ட ஏராளமான அழிவுக்களையே கண்முன் தோற்றுவிக்கின்றார்.

எந்த சிறுபிள்ளைக்கும் தெரியக்கூடிய இது போன்றவற்றால் - மீண்டும் நாட்டினை அழிவுக்குள் கொண்டுவரப் போகின்றாரோ? என்ற ஐயப்பாடு தமிழருக்குண்டு. இந்த ஐயப்பாட்டில் நியாமில்லாமலுமில்லை. முடிவே இல்லையா இவரின் செயல்களுக்கு என்ற இயல்பான கேள்விக்கான பதில் 2006 ஆம் ஆண்டுக்குப் பின்னர்தான். சந்திரிகா ஜனாதிபதியாக இருக்கமாட்டார்.

ஆனால், நாட்டின் நிரந்தரத் தீர்வு என்பது கைப்புண்ணுக்கு கண்ணாடி தேடுவதாக தொடருமானால், தமிழர் சுயநிர்ணய உரிமைக்குள்ளான பிரிந்துசெல்வதற்கான வலுவை அதிகரிப்பதைத் தவிர வேறு வழியே இல்லாதவர்களாகப் போய்விடுவார்கள்.

தென்னிலங்கை அரசியல் நிலைவரத்தினால் குழப்பங்களை மட்டுமே தரமுடியுமென உலகம் இன்று புரிந்துவைத்துள்ளது. இதனால், தமிழர் போராட்டத்தின் இன்றைய சூழல தமிழரின் போராட்டத்திற்கு வலுச்சேர்ப்பதாகவே இந்தக் காலத்தைப் பயன்படுத்த வேண்டும். போரியல் ரீதியாக வெல்லப்படமுடியாத சக்தியாக தமிழர் போராட்டம் மேலெழுந்துள்ளதை மறுதலிக்கமுடியாது. அதேபோல் அரசியல் ரீதியாகவும் திட்டமிட்ட முறையில் முன்னேறவேண்டும்.

அதற்காக இன்னும் சீரான முறையில் தமிழர் தேசியத்தைக் கட்டிக்காக்க தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு திடசங்கற்பம் கொள்ள வேண்டும். இதன்மூலம் தென்னிலங்கை அரசியல் சக்திகள் என்று கூறும் பேரினவாதிகளின் செயற்பாடுகளுக்கும், தமிழர் தாயகத்தைக் குறிவைத்து மேற்கொள்ளும் அழிவுச் செயற்பாடுகளுக்கும் முற்றுப்புள்ளி வைக்க முடியும்.

எங்கள் அரசியல் சக்தியை வலுவாக்குவது அவசியமானதென்பதை சிந்தித்து செயலாற்றி ஜனாதிபதியோ வேறு எவரானாலும் எமது மக்கள் உரிமையை பறிக்க முற்படுவதை அல்லது உரிமைபெறுவதைத் தடுக்க முற்படுவதை ஒழிக்க ஒன்றுபடுவோம். ✦

---

புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் - பகுதி XII - சிவா சின்னப்பொடி

# தொடரும் அகதிவாழ்வின் அவலங்கள்

அறைகளில் தங்குபவர்கள் சிலர் வேலைக்குச் செல்பவராக இருப்பார்கள். சிலர் வேலை



தேடிக்கொண்டிருப்பவர்களாக இருப்பார்கள். வேலைக்குச் செல்பவர்கள் இரவு 10 அல்லது 11 மணிக்கு வேலை முடிந்து வரும்போது அறையில் இருப்பவர்கள் படம் பார்த்துக் கொண்டிருப்பார்கள். அல்லது பாட்டுப் போட்டுக் கொண்டிருப்பார்கள். களைத்துப் போய் வரும் அவர்களுக்கு இது எரிச்சலாக இருக்கும்.

அவர்கள் குளித்துச் சாப்பிட்டுவிட்டு படுக்கைக்குப் போனாலும் இவர்கள் அதை நிறுத்த மாட்டார்கள். இதற்காக வாய்த்தர்க்கத்தில் ஆரம்பிக்கும் சண்டை - அடிதடியில் கூட முடியும். பிரான்சில் இரவு 10 மணியிலிருந்து காலை 7 மணிவரை யாரும் அடுத்தவரை தொல்லைப்படுத்தும் விதத்தில் சத்தம் போடக் கூடாது என்று சட்டம் இருக்கிறது.

நம்மவர்கள் இரவு 11, 12 மணிக்கு எல்லாம் சண்டை போட பக்கத்து வீட்டுக்காரர் காவற்துறைக்கு அறிவிக்க, அவாக்ள் வந்து நம்பவர்களைப் பிடித்துச்சென்ற சம்பவங்கள் நிறைய இருக்கின்றன.

சமைப்பது, வீட்டைத் துப்புரவாக்குவது, சாமான் வாங்கக் கடைக்குச் செல்வது என்று சின்னச்சின்ன விடயங்களுக்கெல்லாம் சண்டை பிடித்து ஆளை ஆள் அறையில் இருந்து வெளியேற்றிய சம்பவங்களும், இவ்வாறு வெளியேற்றப்பட்ட நபர் - வெளியேற்றிய நபரை ஆபிரிக்கர்களுக்கு அல்லது அரேபியர்களுக்கு பணம் கொடுத்து அடிப்பித்த சம்பவங்களும் இருக்கின்றன. 1985 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் பாரிஸ் - மார்கடே புவாசனியே பகுதியில் நடந்த ஒரு சம்பவம் இந்த வதிவிட முரண்பாட்டுக்கு எடுத்துக்காட்டாகவுள்ள ஒரு பதிவாகும்.

யாழ்ப்பாணம் - கந்தர்மடத்தைச் சேர்ந்த ஒரு இளைஞன் தன்னுடைய அறையில் தங்கியிருந்த இரண்டு நண்பர்களுடன் ஏற்பட்ட முரணபாட்டால் அவர்களை வெளியேற்றிவிட்டான்.

ஏற்கனவே அந்த இளைஞன் 40 ஆயிரம் பிராங் சீட்டு ஒன்று கட்டியிருந்தான். அந்த மாதம் அந்தச் சீட்டை அவன் போட்டிருந்தான். அன்று சீட்டுக்காரர் அவனுக்கு பணம் கொடுப்பதாகச் சொல்லியிருந்தார்.

இது அவன் வெளியேற்றிய அந்த இரண்டு நண்பர்களுக்கும் தெரியும். அவர்கள் அவனிடமிருந்து அந்தப் பணத்தைப் பறித்து அவனுக்குப் பாடம் படிப்பிப்பதற்காக 2 ஆபிரிக்கர்களை ஏற்பாடு செய்திருந்தனர்.

அன்று மாலை அவன் சீட்டுக்காரர் வீட்டுக்குச் சென்ற 37 ஆயிரம் பிராங் பணத்தை வாங்கிக்கொண்டு வெளியே வந்தபோது அவனது வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த ஆபிரிக்கர்கள் அவனுக்கு அடித்து விட்டு பணத்தை பறித்துக்கொண்டு ஓடிவிட்டனர்.

இந்தப் பணத்தை அவன் தனது தங்கையின் திருமணத்துக்காகச் சேர்த்ததாகச் சொல்லப்படுகிறது.

பணம் பறிபோன அதிர்ச்சியில் அவனுக்கு புத்தி பேதலித்துவிட்டது. அவனுடன் கூட இருந்த மற்ற நண்பர்கள் அவனுக்கு மருத்துவம் செய்வித்து குணமாக்க எவ்வளவு முயற்சி செய்தும் முடியவில்லை.

காவல்துறையினர் மேற்கொண்ட விசாரணையில் பணத்தைப் பறிக்க ஏற்பாடு செய்தவர்களும், பணத்தை பறித்தவர்களும் கண்டுபிடிக்கப்பட்டு பணம் மீட்கப்பட்டது. ஆனால் பாவம் அந்த இளைஞனுக்கு ஏற்பட்ட மனநோய் குணமாகவே இல்லை. வேலையை விட்டு, அறையை விட்டு, நண்பர்களை விட்டு வெளியேறிய அவனை பாரிஸின் பிரதான தொடருந்து நிலையங்களை கார்து நோட் மற்றும் சத்தலே பகுதியில் 1995 ஆம் ஆண்டு வரை காணக்கூடியதாக இருந்தது.

அழுக்கேறிய நீல நிற ஜீன்ஸ், ஒரு ரீசேட் அதற்கு மேல் அழுக்கேறிய ஒரு கோட் சகிதமாக நம்மவர்களுக்கு அருகில் வந்து 10 பிராங் பிளீஸ் என்று கேட்கும் அவனை கடைசியாக நான் **Gare de Lyon** தொடருந்து நிலையத்தில் 1995 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் பார்த்தேன்.

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

ஆற்று பவர்க்கும் அரண்பொருள் அஞ்சித்தற் போற்று பவர்க்கும் பொருள்.

திருக்குறள்.

## நமது நோக்கு

### தேர்தல் ; தெற்கும்,வடக்கும்...

தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்வதற்கான இறுதிநாள் நெருங்கியுள்ள இவ்வேளையில், இலங்கையின் பாரம்பரிய ஜனநாயக சுதந்திரத்தின் அம்சங்களான கட்சி மாறல், காட்டிக்கொடுத்தல், பணத்திற்கு விலைபோதல். கொள்கைமாறல் போன்ற அனைத்துமே மறைமுகமாகவும் பகிரங்கமாகவும் அரங்கேறிவருகின்றன.

தென்பகுதியில் மதவாதிகளும், பேரினவாதிகளும் அணிதிரளத் தொடங்கியுள்ளதுடன் பௌத்த பிக்குகளே அரசியல் வாதிகளாக மாறத்தொடங்கும் நிகழ்வுகளும் தீவிரம் கொண்டுள்ளன.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி - ஜே.வி.பி கூட்டணி தற்போதைய ரணில் தலைமையிலான காபந்து அரசை தோற்கடிப்பதன் மூலம் அந்த அரசால் கடந்த இரண்டாண்டுகாலமாக முன்னெடுக்கப்பட்டு வந்த சமாதான முயற்சிகளையும் செயலற்றதாக்கும் திட்டத்துடன், பிரசாரங்களை மேற்கொள்ளத் தொடங்கியுள்ள இந்தவேளையில், ரணில் தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணியின் தேர்தல் பிரசாரம் சமாதானத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் முன்வைத்து தமது பிரசாரத்தை ஆரம்பிக்கும் என ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

இதற்கு அமெரிக்கா உட்பட இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகள் அனைத்தும் சமாதானத்தை வலியுறுத்தி அழுத்தம் கொடுப்பதே காரணமாகும்.

சந்திரிகாவும், சமாதான நடவடிக்கைகள் தொடரும் என அடிக்கடி கூறினாலும் கூட அவரது கூட்டணியின் முக்கிய பங்காளிகளான ஜே.வி.பியினர் இனப்பிரச்சினை தொடர்பான பார்வைகள், சந்திரிகாவின் பார்வைக்கு பலவகையிலும் முரணானவைகளாக இருப்பதனால் புதிய கூட்டணி ஆட்சிக்கு வரநேரிட்டால் சமாதானம் கேள்விக்குறியாகிவிடும் அபாயம் நிச்சயமானதொன்றாகவே உள்ளது.

ஜே.வி.பியினர் தற்போது நடைமுறையில் உள்ள போர் நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டினை முற்றாக நிராகரிப்பவர்களாகவே உள்ளனர்.

எனவே இம்முறை இலங்கையின் தேர்தலில் சிங்கள மக்கள் வாக்களிக்கப்போவது யுத்தம் அல்லது சமாதானம் என்ற இரண்டில் ஒன்றிற்காகவே இருக்கும். இம்முறை அவர்களின் வாக்குகள் இலங்கையின் எதிர்கால அமைதியை தீர்மானிக்கும் சக்திவாய்ந்தவை மட்டுமல்ல, இந்த வாக்குகளே அவர்களை இனவாதிகளா, அல்லது மனித உரிமைகளுக்கு மதிப்பளிக்கும் உண்மையான பௌத்த தர்மத்தை பேணும் மக்களா என்பதையும், சர்வதேசம் கணித்துக் கொள்ளவும் வழிவகுக்கும் என்பதிலும் சந்தேகமேயில்லை. இது தென்னிலங்கையின் நிலமை என்றால் வடக்கு - கிழக்கு தமிழர் பிரதேசத்தின் நிலமை இதற்கு முற்றிலும் மாறுபட்டதாகும்.

கடந்த அரைநூற்றாண்டுக்கும் மேலாக பதவிமோகமும், கொள்கை முரண்பாடுகளும் கொண்ட மிதவாத அரசியல் தலைமைகளால் - நேர்மையற்றதும் வரட்டுத்தனமான சுயநல அபிலாஷைகளைக் கொண்டதும், தொலை நோக்குச் சிந்தனையற்றதுமான அரசியல் நடவடிக்கைகளால் எத்தனையோ அவலங்களையும், இழப்புக்களையும், அவமதிப்புக்களையும் அடைந்து நிற்கும் தமிழ்மக்கள் தமக்கான தலைமையை தீர்க்கமாக ஒன்றுதிரண்டு ஒருமித்து வாக்களிப்பதன் மூலம் உலகிற்கு உணர்த்தவேண்டிய வரலாற்றுக் கடமையை இந்தத் தேர்தல் மூலம் நிறைவேற்ற வேண்டியவர்களாக உள்ளனர்.

இன்று தமிழன் என்ற இன அடையாளத்துடன், கம்பீரமாக உலகெங்கும் உலாவரக்கூடிய அளவுக்கு அடிமைகள், அகதிகள் என்ற பழிகளில் இருந்து தம்மை விடுவித்தவர்களாக, சுதந்திரம் தேடும் விடுதலைப்போராளிகளாக, உலகம் வியப்புறும் வீரர்களாக நிமிர்ந்து நிற்பதற்கு யார் காரணம் என்பதை ஆத்மார்த்தமாக உணர்ந்து அந்த ஆளுமை செறிந்த சக்தியின் பின்னால் அணிவகுத்து நிற்பவர்களுடன் தம்மையும், புற முரண்பாடுகளுக்கு அப்பால் இனஉணர்வுடன் இணைத்துக் கொள்ளவேண்டிய கட்டாயத்தை இந்தத் தேர்தல் உணர்த்தி நிற்கிறது.

இன்னமும் எம்மை அடக்கி அழிக்க நினைக்கும் இனவாத மற்றும் வல்லாதிக்க சக்திகளின் அபிலாஷைகளுக்கு கைக்கூலிகளாக இயங்கி உதவும் தமிழர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்.

சொந்த வீட்டை, அந்நிய விரோத சக்திகள் கொழுத்த தீயெடுத்துக்கொடுப்போரை தமிழ்மக்கள் நன்கு அறிவர்.

பதவிகளுக்கும், பணத்திற்கும் சொந்த இனத்தின் ஒருமைப்பாட்டை சிதைக்க நினைப்போரை வரவலாறு ஒருபோதும் மனிதர்களாக அடையாளப்படுத்திக்கொண்டது கிடையாது.

ஒன்றுபட்டு நின்று எமது ஒருமைப்பாட்டின் வலுவை அழுத்தமாகத் தெரிவிக்கவேண்டிய முக்கியமான காலகட்டத்தில் இந்தத் தேர்தல் நடக்கப்போகின்றது.

இந்தத் தேர்தலோ...இனிவரக்கூடிய தேர்தல்களோ, தமிழ் மக்களின் உரிமைகளை நியாயமாக வழங்கக்கூடிய நாடாளுமன்றம் ஒன்றை உருவாக்கப்போவதில்லை என்பதற்கு கடந்த கால நிகழ்வுகளே சான்று.

ஆனாலும், தமிழ்மக்கள் ஒருமித்து, தமிழன் என்ற உணர்வுடன், தங்களுக்கான வரலாற்றை, வீரவரலாறாக எழுதி பெருமிதம் கொள்ள வைத்துள்ள ஒரே ஒரு தலைமை எதுவென இனங்கண்டு, அதனை சர்வதேச சமூகத்திற்கு இறுதியும் உறுதியுமாக உரைப்பதுடன், சந்தர்ப்பவாதிகளையும் எம்மை அடிமைகொள்ள நினைக்கும் சக்திகளின் அபிலாஷைகள் நிறைவேற சதிபுரிவோரையும் இனங்கண்டு புறந்தள்ளிவிட இந்தத் தேர்தலை பயன்படுத்தவேண்டும் என்பதே தமிழுணர்வாளர்களின் விருப்பமாகவும் வேண்டுகோளாகவும் இருக்கும்.

## நாடும் நடப்பும்




# 78 தொண்டராசிரியர்களுக்கு நியமனம் வழங்க அங்கீகாரம்

வடக்கு - கிழக்கில் நியமனம் வழங்கப்படாதிருந்த 91 தொண்டர் ஆசிரியர்களில் 78 பேருக்கு நியமனம் வழங்கப் பொதுச்சேவை ஆணைக்குழு அங்கீகாரம் வழங்கியுள்ளது. இந்த 78 தொண்டர் ஆசிரியர்களின் விபரப்பட்டியல் அடுத்த வாரம் மாகாண கல்விச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படவுள்ளது.

இதனைப் பொதுச்சேவை ஆணைக்குழுவின் உதவிச் செயலாளர் எஸ்.சப்புதந்தரி - தமிழர் ஆசிரியர் சங்கப் பொதுச் செயலாளர் த.மகாசிவத்திடம் தெரிவித்தார்.

நியமனம் வழங்கப்படாதிருந்த 91 தொண்டர் ஆசிரியர்களின் நியமனம் தாமதமடைவது குறித்து த.மகாசிவம் பொதுச்சேவை ஆணைக்குழுவிடம் கேட்டபோதே, மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

ஆயிரம் தொண்டர் ஆசிரியர்களை நியமிக்கும் திட்டத்தின் கீழ், முதலில் 909 பேருக்கு நியமனம் வழங்கப்பட்டது. எஞ்சிய 91 பேரையும் மீள் பரிசீலனையின்பின் நியமிப்பதாகக் கூறி, மாகாணக் கல்விச் செயலாளர் விசேட குழுவையும் நியமித்தார்.

அதன் பேரில் 13 தொண்டர் ஆசிரியர்களை அக்குழு அங்கீகரிக்கவில்லை அதாவது நிராகரித்துள்ளது. ஏனைய 78 பேரையும் நியமனத்திற்கான பொதுச்சேவை ஆணைக் குழுவிற்கு அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# கச்சதீவு செல்லும் படகுகள் பதிவு செய்யக் கோரிக்கை

அடுத்த மாதம் 30 ஆம் திகதி நடைபெறவுள்ள கச்சதீவு அந்தோனியார் ஆலயத்தின் வருடாந்த உற்சவத்தின் போது பயணிகள் படகுச் சேவையை நடத்தவுள்ள படகுகளின் உரிமையாளர்கள் அடுத்த மாதம் முதலாம் திகதி குறிகட்டுவான் இறங்குதுறையிலும், பத்தாம் திகதி நெடுந்தீவு இறங்குதுறையிலும் பதிவுகளை மேற்கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்.

அன்று காலை 10 மணிக்கு படகு தொடர்பான ஆவணங்களின் நிழற்பிரதியை பதிவு செய்யுமாறு, பதிவுகள் முடிந்தபின் அன்றையதினம் கடற்படையினரால் படகுகள் சோதனையிடப்பட்டு தகுதிச் சான்றிதழ் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

மேலும், இம்முறை ஒரு நாள் உற்சவமாக நடைபெற இருப்பதால் வரும் யாத்திரிகர்கள் தங்களுடன் குடிதண்ணீர், உணவு மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் எடுத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# வலதுகுறைந்தோர் பற்றிய விபரங்களை சமூகநலன்புரி அமைச்சு கோரியுள்ளது

(யாழ்ப்பாணம்)

2004 ஆம் ஆண்டுக்கான சி.பி.ஆர் வேலைத்திட்டங்களை ஒரே விதத்தில் இலங்கை முழுவதிலும் செயற்படுத்தும் நோக்குடன் சமூக நலன்புரி அமைச்சினால் ஒவ்வொரு பிரதேச செயலர் பிரிவிலும் உள்ள வலது குறைந்தோர், அவர்கள் தொடர்பாக உள்ள நிறுவனங்கள் பற்றிய தகவல்களை கோரியுள்ளது.

இது தொடர்பான தகவல்களை எதிர்வரும் 27 ஆம் திகதிக்கு முன்னர் அமைச்சுக்கு அனுப்பி வைக்குமாறு செயலாளர் எம்.என்.குருப்ப சகல பிரதேச செயலர்களையும் கேட்டுள்ளார்.

இதேவேளை, இவ் ஆண்டுக்கான சமூக நலன்புரி அமைச்சின் வேலைத்திட்டங்களுக்கு ஜப்பானின் "ஜய்கா" நிறுவனம் முன்வந்துள்ளமையும் இது முன்பள்ளி ஆரம்பித்தல், முன்பள்ளி ஆசிரியர் பயிற்சி, கல்வி மற்றும் சுகாதாரப் பிரிவினை வலுவூட்டல் போன்ற பிரிவுகளுக்கு அனுசரணை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (113)

# மகாபொல நிதியத்தின் பணத்தை தேர்தலுக்குப் பயன்படுத்தத் தடை

மகாபொல நிறுவனத்தின் பணத்தை தேர்தல் நடவடிக்கைகளில் பயன்படுத்துவதைத் தடுக்குமாறு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. நிதியத்தின் பணத்தை முறைகேடுகளான விதத்தில் செலவழிக்க வேண்டாம் என ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க அதன் பணிப்பாளரைக் கேட்டுள்ளார்

அரசியல் தலையீடு, கையாடல்கள் போன்றவற்றால் பல்கலைக்கழகப் புலமைப்பரிசில்களுக்குரிய பணத்தை உரியவர்களுக்குப் பெற்றுக் கொடுக்கும் நடைமுறையையும் பாதிக்கும் எனவே அதிகாரத்தை பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு மகாபொல நிதியத்தின் பணிப்பாளருக்கு உத்தரவு பிறப்பிக்குமாறு ஜனாதிபதி தனது அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கி உள்ளார்.

# மகளிர் தினத்தை முன்னிட்டு கட்டுரை, பேச்சுப் போட்டிகள்

யாழ் மாவட்ட கூட்டுறவு சபையின் மாவட்ட மகளிர் குழு அனைத்துலக மகளிர் தினத்தை சிறப்பாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

இதனை முன்னிட்டு யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையே பேச்சு, கட்டுரைப் போட்டிகளும் முன்பள்ளிகளுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டிகளும், சங்க மகளிர் அங்கத்தவர்களுக்கிடையே பேச்சு ,கட்டுரைப் போட்டிகளும் நடாத்தவுள்ளது.

இந்தப் போட்டியில் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகள் மட்டும் பங்குபற்றலாம் என யாழ் மாவட்ட கூட்டுறவுசபை அதிகாரி தெரிவித்தார்.

சர்வதேச அரசியலில்... கே.ரீ. கணேசலிங்கம்

# உலகப் பொருளாதார சவால்களுக்கு முகங்கொடுக்கும் 'சைபிரஸின்' ஐக்கியம்



முடிந்த வாரத்தில் பிரபல மான அம்சங்களில் ஒன்றாக நிக்கோசியா நகரமும் இருந்தது. நிக்கோசியா என்பதைவிட, சைபிரஸ் என்றால் எல்லோரும் இலகுவாகப் புரிந்துவிடுவர்கள். சைபிரஸின் தலைநகரமே நிக்கோசியா. மத்தியதரைக் கடற் பகுதியில் அமைந்துள்ள அழகான தீவு சைபிரஸ் ஆகும். உலகத்தில் சில தீவுகளுக்கு இராணுவரீதியான முக்கியத்துவத்தினாலும், சர்வதேச வல்லரசுகளின் பாதுகாப்பு நிலைகளாலும், தொடர்ச்சியான பிரச்சினைகளையும், நெருககடிகளையும் கொண்டிருக்கும் துரதிர்ஷ்டமான அரசியல்போக்கு நிலவுகிறது. இதில் இலங்கையும், சைபிரஸூம் அதிகமான வேறுபாடுகளைக் கொண்டிருந்தாலும், பல விடயங்களில் ஒற்றுமை உடையவையாக விளங்குகின்றன. இவ்வாறம் மீளவும் இணைக்க முயலும் சைபிரஸ் அரசியலை நோக்குவோம்.

சைபிரஸ் 9250 சதுர கி.மீ. பரப்பளவைக் கொண்ட தீவாகவுள்ளது. 729000 மக்கள் தொகையையுடைய சைபிரஸ் - கிரேக், துருக்கி ஆகிய பிரதான மொழிகளைக் கொண்ட நாடாகவும், கிறிஸ்தவம், இஸ்லாம் மதங்களையும் உள்ளடக்கியிருக்கும் தீவாகவும் காணப்படுகின்றது. பெரும்பான்மையான கிரேக்கர் வாழும் சைபிரஸில் - துருக்கியர் சிறுபான்மையினராக விளங்குகின்றனர். சைபிரஸின் அரசியல் வரலாறு மத்தியதரைக் கடலை அண்டிய அரசுகளின் அரசியல் வரலாறு போன்றதாகவே உள்ளது. குறிப்பாக ஒட்டமன் பேரரசுவாதத்துக்குள் உட்பட்டிருந்த சைபிரஸ், 1914 ஆம் ஆண்டுகளுக்குப் பின்பு, பிரித்தானியாவின் காலணித்துவ நாடாக மாறுகின்றது. இந்த நிலை 1925 ஆம் ஆண்டுவரை நீடித்த போதும், கிறீஸின் உடன்பாட்டுடனும், சைபிரஸில் வாழ்ந்த கிரேக்கரின் அழுத்தங்களினாலும் கிறீஸூடன் கூட்டுறவான (ENOSIS) ஆட்சிமுறைமைக்குள் உட்படுகின்றது. இது 1931 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட முதலாவது இன முரண்பாடாக உருவெடுத்துள்ளது. ENOSIS என்றழைக்கப்பட்ட UNION ஆட்சிமுறையும் குழப்பத்திற்குள்ளாகின்றது. இரண்டாம் உலகயுத்தத்திற்குப் பின்பு தனியான அமைப்புகளும், ஆயுதக்குழுக்களும் கையோங்கியதுடன், சைபிரஸின் தலைமைத்துவத்தை தமதாக்கிக்கொண்டன. இந்த சூழல் 1959 ஆம் ஆண்டுகள்வரை நீடிக்க, அவ்வமைப்புகளை கட்டுப்படுத்த மீளவும் பிரித்தானிய தனது செல்வாக்கின்கீழ் சைபிரஸை கொண்டுவந்ததுடன், 1960 ஆம் ஆண்டுகளின் கொமன்வெல்த்தில் அங்கத்துவத்தை அளித்து சைபிரஸை சுதந்திர நாடாகமாற்றியது. ஆனாலும், பெரும்பான்மை கிரேக்கர்களுக்கும், சிறுபான்மை துருக்கியர்களுக்கும் இடையில் ஏற்பட்ட முரண்பாட்டை அவ்வரசு கட்டுப்படுத்தமுடியாது, ஐக்கிய நாடுகள் சபையின் சமாதான படையை 1964 ஆம் ஆண்டுகளில் அழைத்தது. 1974 ஆம் ஆண்டுகளில் கிறீஸைப் பிறப்பிடமாகக்கொண்ட சைபிரஸ், கிரேக்க இராணுவ கேணல்களில் சதிப்புரட்சி ஒன்றினால் துருக்கிய இனத்தைப் பாதுகாக்கும் நோக்குடன் துருக்கிய இராணுவம் சைபிரஸூக்குள் நுழைந்தது. அன்றிலிருந்து சைபிரஸ் இரண்டு அலகுகளைக்கொண்ட ஆட்சிமுறைமைகளை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சைபிரஸின் வடக்குப் பகுதியைத் துருக்கிய கட்டுப்பாட்டிலும், தெற்குப் பகுதி கிரேக்க சைபிரஸின் கட்டுப்பாட்டுக்குள்ளும் ஆளப்படும் பிரதேசமாகவுள்ளது.

இத்தகைய அரசியல் பின்னணியைக் கொண்ட சைபிரஸ் - பிரித்தானியாவின் பலகட்ட முயற்சியின்போதும் இணைவுக்கான சாத்தியப்பாடு அற்றுப்போயிருந்தது. தற்போது நிலமை சற்றுமாறி, துருக்கிய சைபிரஸ் தலைமையும், கிரேக்க சைபிரஸ் தலைமையும் ஐ.நா.செயலாளரின் தலைமையில் ஒன்றிணைவுக்கான பேச்சுக்களை தொடங்கியுள்ளனர். இத்தகைய முயற்சி மீளவும் தோற்றுப்போகலாம் அல்லது வெற்றிபெறலாம். எதுவாயினும், சைபிரஸ் மீளிணைவுக்கான அடிப்படை அரசியல்




பொருளாதார பின்னணியை நாம் விளங்கிக் கொள்ளுதல் அவசியம். இலங்கையராகிய நாமும் அத்தகைய இணைவுக்கான ஒரு முயற்சியை முன்னெடுத்து, இடைநடுவில் தற்காலிகமாகக் கைவிட்டநிலையிலிருக்கிறோம் என்றவகையில் சைபிரஸ் தொடர்பான விபரணத்தை அறிதல் அவசியமானதாகும்.

சைபிரஸ் இணைப்புக்கான முயற்சியை ஆரம்பித்தது ஐரோப்பிய யூனியன் என்பதை யாரும் மறுக்கமுடியாது. ஐரோப்பிய யூனியன் நேரடியாக ஈடுபடாதுவிட்டாலும், மறைமுகமாக ஐரோப்பிய யூனியனின் அல்லது யுரோலாந்து என்றழைக்கப்படும் ஐக்கிய ஐரோப்பாவுக்கான கூட்டிணைவே சைபிரஸ் இணைவுக்கான அத்திவாரமாகும். சைபிரஸ்-மத்தியதரைக்கடல் நாடுகளின் அண்மையிலிருந்தாலும், துருக்கியைப்போன்று இஸ்லாமியரைக் கொண்டிருந்தாலும், புவியியல் ரீதியில் ஐரோப்பாவுக்கும், மேற்காசியாவுக்கும் இடையில் அமைந்திருந்தாலும், ஐரோப்பிய நாடாகவே இனங்காணப்படுகிறது. இதனால் சைபிரஸ்- ஐரோப்பாவின் அங்கத்தில் ஒன்றாக விளங்குகின்றது. அதுமட்டுமன்றி பிரித்தானியாவின் செல்வாக்குக்குள்ளும், பிரித்தானியாவின் இராணுவ முக்கியத்துவமான பிரதேசமாகவும் சைபிரஸ் விளங்குகின்றது.

இவை யாவற்றையும் கடந்தநிலையில் உலகத்தில் எழுச்சியடைந்துவரும் உலகமயப்படுத்தல் என்ற பொருளாதார தளத்தின் ஓரங்கமான ஐரோப்பா - சைபிரஸ் போன்ற நெருக்கடிமிக்க அரசுகளை ஒன்றிணைக்க முயலுகின்றது. அதாவது, சைபிரஸ் இரண்டையும் ஒன்றிணைப்பது மட்டுமன்றி, சைபிரஸ்ஸை ஐரோப்பாவுடன் ஒன்றிணைக்கும் ஒரு பாரிய நடவடிக்கை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சியையே உலகமயப்படுத்தல் என்ற பொருளாதார வலைப்பின்னலுக்குள்ளால் சாத்தியப்படுத்த ஐரோப்பா விரும்புகின்றது. கிரேக்க சைபிரஸ்ஸைவிட துருக்கிய சைபிரஸ் கைத்தொழில்மயப்படுத்தலில் பின்தங்கியிருப்பதுடன், நவீன பொருளாதாரத்துடன் இணைவதில் ஆர்வமற்ற பிரதேசமாகவும் உள்ளது. இதனால், சைபிரஸ் என்ற ஓரமைப்புக்குள் துருக்கிய சைபிரஸின் வளர்ச்சியானது சாதகமாக அமைவதுடன், கிரேக்க சைபிரஸின் பொருளாதாரத்திற்கான பாதுகாப்பையும் ஐரோப்பா வழங்கத்தயாராகவுள்ளது. அத்தகைய சூழலில் சைபிரஸ் இணையத்தவறுமாயின், துருக்கிய சைபிரஸாகவும் கிரேக்க சைபிரஸாகவும் ஐரோப்பிய யூனியனுடன் இணையத் தயாராக உள்ளதாகவும், அதற்கு ஐரோப்பிய யூனியன் அனுமதியளிக்க உள்ளதாகவும் உறுதிப்படுத்தமுடியாத தகவல்கள் தெரியப்படுத்துகின்றது.

எனவே, சைபிரஸ் போன்ற இனரீதியான நெருக்கடியைக்கொண்ட அரசுகள் சுமுகமாக, இசைவான, அமைதியான, அரசியல் பொருளாதார, சகவாழ்வை சாத்தியப்படுத்தவே உலகமயப்படுத்தல் சமூகம் விரும்புகிறது. அத்தகைய உலகமயப்படுத்தல் சமூகத்தின் விருப்புகளும், எண்ணங்களும் சாத்தியப்படாதபோது, தனித்தனியான அலகுகளை உள்வாங்கியாவது தமது பொருளாதார இயங்குவிசையைச் சாத்தியப்படுத்தவேண்டுமென எண்ணுகின்றன. அதன்படி, உலகின் இயங்குவிசையுடைய பொருளாதார பரிமாணத்தை நோக்கிய அரசியல் - சமூக ஒருங்கிசைவும், அதுசார்ந்த அரசியல், பொருளாதார அடுக்கமைவுமே தற்போதைய உலகளாவிய சூழலுக்கு பொருத்தப்பாடுடையது. அந்தவகையில் சைபிரஸ் உலகத்திற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.

சைபிரஸைப் போன்ற இனரீதியான பிணக்குகளைக்கொண்ட அரசுகள் ஒவ்வொன்றுக்கும் உலகம் விடுத்துள்ள சவால்- உலகமயப்படுத்தல் என்ற பொருளாதார இசைவுக்குள் அகப்படுத்துவதாகும். சில சந்தர்ப்பங்களில் உலகமயப்படுத்தல் என்ற பொருளாதார இயங்குவிசைக்கு நேரடியாக சைபிரஸால் உதவமுடியாதிருக்கலாம். அல்லது போதிய பொருளாதார சுரண்டலை உலகமயப்படுத்தல் சமுகத்தால் சைபிரஸ் மேற்கொள்ளமுடியாதிருக்கலாம். ஆனால், சைபிரஸின் மறைமுகமான பங்களிப்பும் ஒத்துழைப்பும் உலகமயமாக்கல் சமூகத்துக்கு அவசியமானதாக அமையும். அந்த வகையில்தான் சைபிரஸ் - யுரோலாந்தின் பொருளாதார பரிணாமத்திற்கு அவசியமான தொன்றாக அமைகின்றது. அந்தவகையான ஒத்துழைப்பு ஏன் அவசியமாகின்றது என்பதே தற்போதைய கேள்வி.

உற்பத்தி, மீள் உற்பத்தி என்ற அடிப்படையிலான புரட்சிகள்பல, கடந்த இரண்டு தசாப்தங்களுக்குள் நிகழ்ந்து முடிந்துள்ளன. உயிர் உள்ள உழைப்பின் (**LIVING LABOUR**) காலப்பகுதி முடிந்து, உயிரற்ற உழைப்பின் காலம் (**DEATH LABOUR**) வளர்ச்சியடைந்த சூழலில், தாராள உற்பத்தி அபரிமிதமான உற்பத்தி காணப்படுகின்றது. இந்தக் காலத்தில் உற்பத்தியைவிட தரமுடைய உற்பத்தி போட்டியைவிட சந்தை வாய்ப்புக்கான காலமாகவே உள்ளது. உற்பத்திசெய்யப்பட்ட பொருட்களை சந்தைப் படுத்துவதற்கான வாய்ப்புக்களை இனங்காண்பது, ஏற்றுமதி செய்வது பிரதான நாடுகளின் பிரதான முயற்சியாகவும், அதுவே உலகப் பொருளாதார பலமாகவுமுள்ளது. இந்தநிலையில்தான் உலக அமைதி, சமாதானம், ஐக்கியம், ஒத்துழைப்பு என்பன அவசியமானதாக மாறுகின்றது. அத்தகைய சைபிரஸ் - நிலையான அரசியல், பொருளாதார ஒத்துழைப்பை உலகத்திற்கு வழங்கக் கூடிய நிலையத்தில் அமைந்துள்ள தீவாக மத்தியதரைக்கடல் பிரதேசத்தில் அமைந்துள்ளது. சர்ச்சையும், பிரச்சினையும் குவிந்துள்ள அதேநேரத்தில், எண்ணெய் வளத்தையுடைய மேற்கு ஆசியாவின் நாடுகளுக்கு அண்மையில் அமைந்திருப்பது எனப் பல பயன்பாடுகளைத் தரக்கூடிய மையத்தில் உள்ளதே முக்கியமானதாகும்.

எனவே, சைபிரஸ் - ஐக்கியத்திற்கும், உலக பொருளாதார இயங்குவிசைக்கும் இடையில் ஒரு ஒருங்கிசைவு காணப்படுகிறது எனக்கூறலாம். அந்த வகையான உலக ஒழுங்கே தற்போது காணமுடிகிறது. இதிலிருந்து இலங்கை மாறுபட முடியாதென்பதையும் உணர்ந்துகொள்ளுதல் அவசியம்.

**சைபிரஸ் - பிரித்தானியாவின் பல கட்ட முயற்சியின்போதும் இணைவுக்கான சாத்தியப்பாடு அற்றுப் போயிருந்தது. தற்போது நிலமை சற்றுமாறி துருக்கிய சைபிரஸ் தலைமையும் கிரேக்க சைபிரஸ் தலைமையும் ஐ.நா.செயலாளரின் தலைமையில் ஒன்றிணைவுக்கான பேச்சுக்களை தொடங்கியுள்ளனர். இத்தகைய முயற்சி மீளவும் தோற்றுப்போகலாம் அல்லது வெற்றிபெறலாம். எதுவாயினும், சைபிரஸ் மீளிணைவுக்கான அடிப்படை அரசியல், பொருளாதார பின்னணியை நாம் விளங்கிக்கொள்ளுதல் அவசியம்.**

## பார்வைகள் பதிவுகள் பகிர்வுகள்

கிளிநொச்சியின் இரணைமடுவிலிருந்து யாழ்ப்பாணதத்திற்குக் குடிநீரை கொண்டுவருவது பற்றி யாழ்ப்பாண அரச அதிகாரிகள் அதிகம் அறிக்கைகளை வெளியிட்டுக் கொண்டிருக்கின்றனர். இதற்கும் அப்பால் கடந்துள்ள யாழ்ப்பாணத் தீவுகளுக்கு இரணைமடு தண்ணீரை கொண்டுவருவது பற்றியும் கதைக்கப்படுகிறது. இரணைமடுவினைவிட இலகுவழியான திட்டங்கள ஏற்கனவே இருக்கையில் அதைத் திரும்பிக்கூடப் பார்க்கப்படாதுள்ளது.

யாழ்ப்பாணத்தில் குடிநீர் பற்றாக்குறை எதிர்வுகூரப்பட்டு, 1920 ஆம் ஆண்டுகளிலேயே இலங்கை சட்ட நிர்வாகசபையில் பாலாகிருஸ்ணன் என்பவர் யாழ். கடல்நீர் ஏரியை நன்னீராக்கும் திட்டத்தை முன்வைத்தார். அது ஆனையிறவு ஏரியாக இன்றுள்ளதை கடல்நீர் தடுத்து, யாழ்ப்பாணத்திற்கான நன்னீரேரி யாக்குவதுதான் அவரது திட்டமாகும். குடாநாட்டில் குடிநீர் தட்டுப்பாடு 1920 ஆம் ஆண்டுகளிலேயே முன்வைக்கப்பட்டுவிட்டது. ஆனால், 1960 ஆம் ஆண்டுகளிலேயே நீர்ப்பாசன பொறியிலாளர் ஆறுமுகம் திட்டவரைபு செய்யும் வரை அதனை நடைமுறைப்படுத்துவது பற்றி எவரும் யோசிக்கவில்லை. ஆனையிறவு ஏரியை நன்னீரேரியாக்கும் ஆறுமுகம் வரைந்த திட்டம் இன்றுவரை ஆறுமுகம் திட்டம் எனவே அழைக்கப்படுகிறது.

ஆனைய்றவுக் கடல்நீரேரியின் மேற்புறம் கண்டிவீதி அணையாக உப்புநீர் உட்புகாதவாறு தடுக்கின்றது. கிழக்குப்புறம் நல்ல தண்ணீர் தொடுவாயை உடைத்தே கடலிலே நீர்மட்டம் மாரியில் அதிகமாகும் போது கடலுக்குச் செல்கின்றது. அவ்வேளையில் மட்டும் கடல்நீர் ஏரியில் நுழைகிறது. இதனைத் தடுக்க இங்கு ஒரு அணை கட்டப்பட்டு, வான்கதவு அமைக்கப்படவேண்டும் என்பதே ஆறுமுகம் திட்டமாகும். சாதாரணமாகவே ஆனையிறவு ஏரி நீரை ருசித்தால், சிறிதளவு உவர் கலந்துள்ளதாகவே இருக்கும். அது கடல்நீர் உட்புகுவதால் ஏற்படுவதாகும். ஆனையிறவு ஏரியில் இரணைமடுவில் நீர் நிரம்பிவரும் கனகராயன் ஆறு, விசுவமடு ஆறு குளங்களில் நீர் நிரப்பிவரும். பிரமந்தாறு, உடையார்கட்டு குளத்தில் நீர் நிரப்பிவரும். தேராவில் ஆறு மற்றும் சிறிய ஆறுகள் ஆனையிறவு கடல் நீரேரியில்தான் நீரை நிரப்புகின்றது. இதனால் ஆனையிறவு ஏரி முழுமையாக நன்னீர் தான். இதனுள் கடல்நீர் உப்பு கலக்காது தடுப்பதன் மூலம், அதனை ஒரு நன்னீர் ஏரியாக்கி யாழ்ப்பாணத்துக்குக் குடிநீரை வழங்குவதே ஆறுமுகம் திட்டம் - 1960 ஆம் ஆண்டுகளில் முன்வைக்கப்பட்டதன் நோக்கம். ஆனால், அது கடைசிவரை நிறைவேற்றப்படவேயில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளின் எதிர்காலத் தமிழீழத் திட்டத்தில் இதனை முன்வைத்திருக்கின்றனர்.

இன்று ஆனையிறவு இரானுவமற்ற, போரற்ற பகுதியாகவுள்ளது. அதனை ஒரு திட்டம்மூலம் நன்னீரேரியாக்கமுடியும். ஆனால், அதனைக் கருத்திலெடுக்காது இரணைமடுவிலிருந்து குழாய்மூலம் கொடிகாமத்துக்கு நீரைக் கொண்டுசென்று அங்கிருந்து 'யாழ்ப்பாணத்தின் ஏனைய பகுதிகளுக்கு நீரைக்கொண்டுசெல்வது பற்றி கூறப்படுகிறது. இரணைமடு - வடபகுதியின் மிகப்பெரிய குளந்தான். இதன் நீளம் 10 கிலோமீற்றர், அகலம் 2 கிலோமீற்றர், ஆழம் 34 அடி, கொள்ளளவு 1 இலட்சத்து 6 ஆயிரம் ஏக்கர் அடி. ஆயினும், இதனுடைய நீர் கிளிநொச்சி வேளாண்மைக்கே போதுமானதாக இல்லை. பருவமழை சீரானதாகவும் இல்லை. சில ஆண்டுகளில் மட்டுமே இரணைமடு நிறைந்து வான்பாய்கிறது. இதனை நம்பி யாழ்ப்பாணத்திற்கு குடிநீரை வழங்குவது - மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவது போலாகும். இதைவிட, ஒவ்வொரு மாரியிலும் நிறையும் ஆனையிறவை நன்னீரேரியாக்குவது பற்றி யோசித்தால், சிறியளவிலாவது பயன்கிட்டும். இரணைமடுவின் அணை உயர்த்தப்பட்டு, கொள்ளளவு அதிகரிக்கப்படுவது பற்றி யோசிப்பதானால் - அதனால் வன்னியின் காடுகள் அழிந்து சூழல் மாசடைவது பற்றி சிந்திக்கவேண்டும். இன்று உலகளவில் பனைகள் அழிவதால் பாரிய நீர்ப்பாசனக் குளங்கள் அமைப்பு, பிரிவாக்கல் என்பன தடுக்கப்படுகின்றன. ஆனையிறவு ஏரித்திட்டத்தில் இலங்கை அரசின் கனவுகளில் ஒன்றாக மகாவலியை வடக்குக்கு திருப்புதலும் அடங்குகின்றது.

மகாவலியே 'வரண்டு சிங்கள தேசத்திற்கு நீர் வழங்கமுடியாதிருக்கையில், வடபகுதிக்கு அந்த நீர் வருவது என்பது கனவுதான். மகாவலி நீர் வராவிட்டாலும்கூட, இப்பொழுது வடபகுதி ஆறுகளின் நீரை ஆனையிறவின் நரே ஆனையிறவு ஏரியை ஆண்டுதோறும் நிரப்பிவருகிறது.

இரணைமடு நீர் நடைமுறைச்சாத்தியமானதாக சாத்தியம் இல்லை என்பதே சுட்டிக்காட்டப்பட வேண்டியவிடயமாகும்.

திரு.த.திரு

# ஜெருசலேம் பஸ் பிரயாணிகள் மீது தற்கொலைக் குண்டுத் தாக்குதல்

(ஜெருசலேம்)

ஜெருசலேம் பஸ் பிரயாணிகள் மீது பலஸ்தீனத் தற்கொலைக் குண்டுதாரியினால் நடத்தப்பட்ட தாக்குதலில் - 7 பேர் கொல்லப்பட்டதுடன் 12 பேர்வரை காயமடைந்துமுள்ளனர்.

மேற்குக் கரைப் பிரதேசத்தில் அமைந்துள்ள பாதுகாப்புச் சுவரின் ஒரு பகுதியை அகற்றிய சிறிது நேரத்தின் பின் இந்தத் தாக்குதல் நிகழ்ந்துள்ளது. பலஸ்தீனத் தலைவர் யசீர் அரபாத்தின் 'பக்தா' குழுவினர் இந்தத் தாக்குதலை நடத்தியதாக உரிமை கோரியுள்ளனர்.

அவசரகாலப் பணிகளை மேற்கொள்வதற்காக மீட்புப் பணியாளர்கள் சம்பவம் நடைபெற்ற பிரதேசத்திற்குச் சென்றுள்ளதாக பி.பி.ஸியின் 'ஜேம்ஸ் ரேய்ரோல்ட்' தெரிவித்தார்.

மேலும், பலஸ்தீனப் பிரதமர் 'அகமட் கூரே' பொதுமக்கள் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலைக் கண்டித்துள்ளார்.



இந்தக் குண்டுத் தாக்குதல் தொடர்பாக கருத்துத் தெரிவித்த இஸ்ரேலிய அதிகாரிகள், தற்கொலைக் குண்டுதாரிகள் வழமைக்கு மாறாக அதிக அளவிலான சேதங்களை ஏற்படுத்துவதற்காக, கூர்மையான ஆணிகளையும் குண்டுடன் இணைத்திருந்ததாகத் தெரிவித்தார்கள்.

பாதுகாப்புச் சுவர் ஒன்றின் அவசியத்தை இறுதியாக நடைபெற்ற இந்த குண்டுத் தாக்குதல் தெளிவுபடுத்தியுள்ளதாக இஸ்ரேலிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவங்களுக்கான நீதியான தீர்வொன்று 'சோக்'கில் அமைந்துள்ள சர்வதேச நீதிமன்றத்தில் வழங்கப்படும் எனவும் அதிகாரியொருவர் தெரிவித்தார்.

இதனிடையே இன்று சர்வதேச நீதிமன்றத்தில் இஸ்ரேலில் தடுப்புச் சுவர் தொடர்பான முறைப்பாடு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

## பயணிகளுடன் பஸ் ஏரியில் வீழ்ந்து மூழ்கியது



பிரேசிலின் வட கிழக்குப் பகுதியான 'போட்டலேசா'வில் பஸ்வண்டி ஒன்று பிரயாணிகளுடன் ஏரியில் வீழ்ந்து மூழ்கியுள்ளது. சாரதி உட்பட அதில் பயணம்செய்த அனைத்துப் பிரயாணிகளும் மரணமடைந்துள்ளதாக அச்சம் தெரிவிக்கப்படுகிறது.

நீச்சல் பயிற்சிபெற்ற பொலிஸார் நீரேரியில் இறந்தவர்களின் சடலங்களைத் தேடிவருகின்றனர்.

கூடுதலான பிரயாணிகளை ஏற்றிச்சென்றதே விபத்திற்குக் காரணமென அதிகாரிகள் தெரிவித்தனர். இறந்தவர்களின் மொத்த எண்ணிக்கை இதுவரை தெரிவிக்கப்படவில்லை.

## குளோனிங் பசுவுக்குப் பிறந்த குளோனிங் கன்றுக் குட்டி



உடலில் ஏதாவது ஒரு பகுதியில் இருந்து செல்களை எடுத்து அதிலிருந்து குளோனிங் முறையில் உயிரினங்களை உருவாக்கும் ஆராய்ச்சியில் பல்வேறு நாடுகள் தீவிரமாக ஈடுபட்டுவருகின்றன.

குளோனிங் முறையில் 'டோலி' என்ற ஆட்டுக்குட்டியை ஸ்கொட்லாந்து விஞ்ஞானிகள் சில ஆண்டுகளுக்கு முன் உருவாக்கினார்கள்.

இதனையடுத்து குளோனிங் முறையில் - பசு, குரங்கு, பண்டா, கரடி போன்றன உருவாக்கப்பட்டன.

பிரேசில் நாட்டைச் சேர்ந்த விவசாயத்துறை விஞ்ஞானிகள் குளோனிங் முறையில் கடந்த 2001 ஆம் ஆண்டு ஒரு பசுவை உருவாக்கினார்கள். இந்த குளோனிங் பசுவுக்கு 'விட்டோ ரியோசா' என்று பெயரிடப்பட்டது.

இந்தப் பசுவின் கால்ப் பகுதியிலிருந்து செல்லை எடுத்து அதன் மூலம் (திசு) இன்னொரு குளோனிங் கன்றுக்குட்டியைப் பிறக்கவைத்தனர். பெப்ரவரி 5 ஆம் திகதி பிறந்த குளோனிங் கன்றுக்குட்டிக்கு விக்டோரியா என்று பெயரிட்டு, குளோனிங் பசு மற்றும் கன்றுக் குட்டியின் படத்தை விவசாயத்துறை விஞ்ஞானிகள் வெளியிட்டுள்ளனர்.

இதற்கிடையே, ஸ்கொட்லாந்தில் டோலியை உருவாக்கிய விஞ்ஞானிகளில் ஒருவர் கூறும்போது -

"குளோனிங் முறையில் மனிதர்களை உருவாக்க அனுமதியளிக்கலாம். சில நிபந்தனைகளுடன் குளோனிங் குழந்தையைப் பிறக்கவைப்பதால் பரம்பரை நோய் இல்லாத குழந்தையைப் பெறமுடியும்'' என்று கருத்துத் தெரிவித்திருக்கிறார்.

ஏற்கனவே, 'குளோனாயிட்' என்ற அமைப்பு குளோனிங் முறையில் இதுவரை 5 குழந்தைகளை உருவாக்கியிருப்பதாகக் கூறுகிறது. ஆனால், அதன் பெயர் விபரங்களை வெளியிடாமல் ரகசியமாக வைத்துள்ளது.

## உகண்டாவில்

# குடிசைக்குள் தஞ்சம்புகுந்த மக்களை தீவிரவாதிகள் தீயிட்டுக் கொழுத்தினர்

## 170 அக்திகள் கொடூரமாகக் கொலை

உகண்டாவின் வட பகுதியில் 'லீனா' என்ற பிரதேசத்தில் அமைந்திருந்த அகதி முகாம் ஒன்றைத் தீவிரவாத அமைப்பொன்று தாக்கி எரியூட்டியது. இந்தச் சம்பவத்தில் 170 அகதிகள் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதலை 'லோட் ரெஸிஸ்டன்' எனப்படும் தீவிரவாதக் குழுவினரே நடத்தியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் குழு கடந்த 18 வருடங்களாக தெளிவான நோக்கங்கள் எதுவுமில்லாது போராடி வருகின்றது.

தாக்குதல் நடைபெற்ற முகாமிற்குச் சென்ற கிறிஸ்தவ பாதிரியாரான 'ஷெபாட் அயிலி' - 121 உடல்களைத் தாம் கண்டதாகவும், 51 உடல்கள் புதைக்கப்பட்டுள்ளதாகவும் 'ஏ.எவ்.பி' செய்தி நிறுவனத்திற்குத் தெரிவித்தார்.



தாக்குதல்களால் குழப்பமடைந்த மக்கள் தமது குடிசைகளை நோக்கிச் சென்றபோது, தீவிரவாதிகள்-குடிசையுடன் அவர்களை எரியூட்டியதாக சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்தனர்.

தீவிரவாதிகள் - விமான எதிர்ப்புத் துப்பாக்கி உட்பட பல ஆயுதங்களைத் தாக்குதலின் போது உபயோகித்ததாகக் கூறப்படுகிறது.

'லோட் ரெஸிஸ்டன்' எனப்படும் இந்தக் குழு சிறுவர்களைக் கைதுசெய்து, சித்திரவதைகள் மூலம் தமது குழுவுடன் போராடுவதற்காக இணைத்து வருகின்றது.

உகண்டாவில் அரச படையினர் இந்தக் குழுவைப் பலவீனப்படுத்தி வருவதாகத் தெரிவித்தபோதும், இந்தக் குழுவினால் பொதுமக்கள் அதிகளவில் பாதிக் கப்பட்டுவருவதாக பி.பி.ஸியின் 'வில் ரோஸ்' தெரிவித்துள்ளார்.

# அமெரிக்க ஹெலிகொப்ரர்; ஆப்கானிஸ்தானில் விபத்து

ஆப்கானிஸ்தானின் தென்பகுதியில் கட்டடப் பணிகளை மேற்கொள்வதற்காகப் பிரயாணம் மேற்கொண்டிருந்த ஹெலிகொப்டர் ஒன்று விபத்தில் சிக்கிக்கொண்டது.

இந்த விபத்தில் அவுஸ்ரேலிய மாலுமி ஒருவர் கொல்லப்பட்டும் அமெரிக்கப் பிரஜை ஒருவர் காயப்பட்டதாகவும் அமெரிக்கத் தூதுவராலய அதிகாரிகள் தெரிவித்தனர்.

உலக நோக்கு

ஹெலிகொப்டர் மீது சிறிய ஆயுதங்களைக் கொண்டு நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தினாலேயே தரையிறக்கப்பட்டதாகப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். எனினும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாக இதுவரை அறியப்படவில்லை.

நேற்று நடைபெற்ற இந்த விபத்துத் தொடர்பாக மாறு பட்ட கருத்துக்கள் தெரிவிக்கப்படு வதாக தூதுவராலய அதிகாரிகள் தெரித்துள்ளனர்.

# தனது மகளுக்கு சதாம் ஹுசைன் கடிதம்; பரிசோதிக்க துடிக்கும் அமெ. அதிகாரிகள்

(வொஷிங்ரன்)

ஈராக்கின் வட பகுதியில் இரு பிரதேசங்களில் பொலிஸாருக்கெதிராகத் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

முதலாவது தாக்குதலில் துப்பாக்கிதாரிகள் இருவர் கொல்லப்பட்டுள்ளனர். மேலுமொரு தாக்குதல் முசோலில் சனிக்கிழமை நடைபெற்றுள்ளது.

இந்தத் தாக்குதலில் பொலிஸ் அதிகாரியான அப்துல் - அசல் - சகிமை அவரது இல்லத்தில் வைத்துக் கொல்வதற்கு மேற்கொண்ட முயற்சி முறியடிக்கப்பட்டு துப்பாக்கிதாரி கொல்லப்பட்டார்.

இதனிடையே, சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தைச் சேர்ந்த இரு அதிகாரிகள் சதாம் ஹுசைன் தடுத்துவைக்கப்பட்டுள்ள பிரதேசத்திற்கு விஜயம் மேற்கொண்டிருந்தனர்.

இந்த விஜயத்தின்போது மருத்துவர் ஒருவரும் செஞ்சிலைவச் சங்கத்தினருடன் சமூகம் அளித்திருந்தார். இவர்களின் விஜயத்தின்போது கடிதம் ஒன்று - சதாம் ஹுசைனால், கையளிக்கப்பட்டிருந்தது.

ஜோர்தானில் வசிக்கும் அவரின் மகளுக்கு இந்தக் கடிதம் எழுதப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க அதிகாரிகள் இந்தக் கடிதத்தினை முதலில் பார்வையிடவுள்ளனர். இந்தக் கடிதத்தின் மூலம் சதாம் ஹுசைன் தனது ஆதரவானர்களுக்குச் செய்திகளைத் தெரிவிக்கின்றாரா என்பதனை அறிவதற்காகவே இந்தக் கடிதத்தினைப் பரிசோதிக்கவுள்ளனர்.

தமது விஜயத்துக்கான காரணத்தை செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகள் தெரிவிக்கும்போது -

தடுத்துவைக்கப்பட்டுள்ள கைதிகளின் நிலையை அறிந்துகொள்வதற்காகவும்,

உணவு, நீர் ஆகியன சீராக வழங்கப்படுகின்றனவா என்பதனையும் அறிந்து கொள்வதற்கே தாம் அங்கு சென்றதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

# அதிகரித்துவரும் பயங்கரவாத சம்பவங்களால் பிரித்தானியாவின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல்



அதிகரித்துவரும் பயங்கரவாத சம்பவங்களினால் பிரித்தானியாவின் உள்நாட்டுப் பாதுகாப்புச் சேவையான 'எம் 15' பணியாளர்களின் எண்ணிக்கையை 50 வீதத்தினால் அதிகரிப்பதற்கான திட்டத்தை, பிரிட்டன் நாடாளுமன்றத்தில் அடுத்த வாரம் தெரிவிக்கவுள்ளதாக பிரட்டனின் உள்நாட்டமைச்சர் தெரிவித்தார்.

இந்தத் திட்டத்தின் மூலம் மேலும் 1000 பேர்வரை சேவைக்காக இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

தேர்ந்தெடுக்கப்படவுள்ளோர் புலனாய்வு மற்றும் கண்காணிப்பு ஆகிய கடமைகளில் ஈடுபடவுள்ளனர். எதிர்க்கட்சியினரும் இந்த் முயற்சிக்குத் தமது ஆதரவினைத் தெரிவித்துள்ளனர்.

உள்நாட்டுப் பாதுகாப்பு சேவை முன்னர் 'ஐ.ஆர்.ஏ' எனப்படும் அயர்லாந்து தீவிரவாதிகளுக்கெதிரான புலனாய்வுகளை மேற்கொண்டிருந்தது. பின்னர் 'அல் கொய்டா' வின் தாக்குதல்கள் அதிகரிக்கப்பட்டபோது அராபியமொழி பேசும் பணியாளர்களைத் தேர்ந்தெடுத்திருந்தது.

தீவிரவாத அமைப்புக்களுடன், தொடர்புடையவர்கள் பிரித்தானியாவுக்கு உள்ளேயும் வெளியேயும் பிரயாணங்கள் மேற்கொண்டு வருவதாகவும் புலனாய்வுத்துறை அதிகாரிகள் தெரிவித்தனர். கடந்த காலத்தில் தீவிரவாதக் குழுக்கள் தொடர்பான தகவல்களைச் சிறந்த முறையில் சேகரிக்கவில்லை என, புலனாய்வுத் துறையினர்மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

1909 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட பிரிட்டனின் உள்நாட்டு பாதுகாப்புச் சேவையில் தற்போது 1900 பேர்வரை பணிபுரிகின்றனர்.

விற்பனையாளர் தேவை

ஏமது நிறுவனத்துக்கு விற்பனையாளர்கள் தேவை.

ஆசீர் வணிக நிலையம்,
202 A, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2234)

நிறஞ்சனாஸ் சங்கானை

பிரசாந், தியாகராஜன், பானுப்பிரியா

ஜெய்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00.(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு : இரவு 8.45 (பு.நே)

DUNGONS DRAEONS

(சி-2196)

ராஜா யாழ்ப்பாணம்.

விஜயகாந்த், வடிவேலு, பிரபுதேவா, பாண்டியராஜன் நடித்த



எங்கள் அண்ணா

10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே.)

(சி-2197)

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிட்டால் மதரீதியான பிரச்சினைகள் ஏற்படக்கூடும்

## பராக்கிரம குணரத்தின தெரிவிப்பு

(கொழும்பு)

பௌத்த பிக்குகள் தேர்தலில் போட்டியிடுவது, பௌத்த மதத்திற்கு மட்டுமல்லாது இந்த நாட்டில் வாழும் அனைத்து மக்களுக்கும் மற்றும் பிற மதத்தவர்களுக்கும் மிகுந்த கேடு விளைவிக்கக்கூடியதாகும்.

இவ்வாறு - கொழும்பிலுள்ள ஒ.பி.எ. என்ற அமைப்பு தெரிவித்துள்ளது. இதுதொடர்பாக அந்த அமைப்பின் தலைவர் பராக்கிரம குணவர்த்தன மேலும் தெரிவித்ததாவது-

நாட்டில் தற்போது மக்கள் பல விடயங்களில் பிரிந்துபோயுள்ளனர். பௌத்த பிக்குகள் தேர்தலிலும் போட்டியிடுவதனால் நாடு மதரீதியாக இன்னும் பிரிவுபடலாம்.

இந்த நாட்டை மீளக்கட்டியெழுப்புவது புத்தபிக்குகளின் கடமை மட்டுமல்ல, அது எல்லா மதங்களினதும் கடமையாகும். இவர்களது வேலை அரசியலில் போட்டியிடுவது அல்ல.

மாறாக இந்த நாட்டின் மக்களை நல்வழிப்படுத்த, குறிப்பாக நல்ல தேகாரோக்கியமிக்கவர்களாக அவர்களை நல்வழிப்படுத்த அவர்களுக்கு ஆலோசனை வழங்குவதுடன் அரசியல்வாதிகளுக்கும் நல்ல ஆலோசனை வழங்குதலாகும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.





"என்ன கனகன்னை சங்கரியார் தேர்தலில சுயேற்சையாய்ப் போட்டிபோடப் போறாராமே..."

"ஓமோம் கேள்விப்பட்டன்... கடைசியில அவர் இப்படி ஒரு முடிவுக்கு வரும்படி ஆரோ தள்ளி விட்டிட்டாங்கள் போலும்..."

"கொஞ்சக் காலமா அவர் சுய இச்சைப்படி தானே நடந்துகொண்டு வந்துள்ளார் தெரியுந்தானே..."

"தானும் கெட்டு கூட்டணியையும் குழப்பி அவர் செய்த கூத்துக்கள் அவரைப் பற்றி இருந்த கொஞ்ச நஞ்ச மதிப்பையும் போகச் செய்திட்டுது... மணியம்..."

"கூட்டணியைத் தான் விலாசமில்லாமல் பண்ணிப் போட்டார். இப்ப கூட்டமைப்பைக் குழப்பவெல்லோ கும்மாளம் போடுறார்... பேசாமல் தமிழ்ச் சனத்தைக் குழப்பாமை இருக்கலாமெல்லோ...?"

"அதெப்படி முடியும்... அங்காலை அயலக அரசு இங்காலை நிறைவேற்று அதிகார ஆட்சி.... இரண்டுக்கும் விசுவாசியாக இருக்க நினைச்சா, சொந்த இனத்தைப் பகைக்க வேண்டியதுதான்..."

"பேசாமை இத்தனை காலப்பதவி போதும்... இனி வெளியாலை இருந்து கொஞ்சமேனும் அமைதி காக்கலாம் தானே... மேடைப் பேச்சு அரசியல் காலாவதியாகி விட்ட நிலையில் போராட்ட அரசியல் அனுகுமுறைக்கு இசைவாக நடந்தாலென்ன...?"

"நாடாளுமன்றக் கதிரை ஆசை சும்மா இருக்க விடுமே... ஆரைக் குழப்பியும் அரசோடு ஒட்டி இருக்கத்தான் தூண்டும்.... சங்கரியார் மட்டும் அதுக்கு விதிவிலக்கே..."

"ஓமோம்.... அவரும் எத்தனை கட்சிமாறி, எத்தனை கொள்கை மாறி, எத்தனை கதிரை மாறி இருந்தவர்.... கூட்டணிக் கதிரையிலயிருந்து இப்ப சுயேட்சைக் கதிரைக்கும் மாறிவிட்டார்."

"ஊரார் சொற்கேட்டால்... ஊர் ஊராய்த் திரியவேண்டியதுதான்...

"கடைசியில.... சங்கரியாரும் இன ஒருமைப்பாட்டைக் குலைக்கும் கைங்கரியத்திலை இறங்கியது பரிதாபம்தான்..."

தெருவாசி

## தேர்தலில்...

ஒன்றியப் பிரதிநிதிகளைச் சந்திப்பதற்கு அவர் மறுத்துவிட்டார். இவ்வாறு யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையிலும் -

அனைத்துத் தமிழ்மக்களும் ஒன்றுபட்டு ஒரே அமைப்பாகச் செயறபட்டு நாடாளுமன்றப் பிரதிநிதிகளைத் தெரிவுசெய்ய வேண்டுமென்றும் அப்போதுதான் எமது உரிமைகளுக்காக ஒன்றுபட்டு ஒரே குரலில் ஒலிக்கவும், இயங்கவும் முடியும் என்ற நன்நோக்கத்தை தெரியப்படுத்தச் சென்றவேளை எம்மைச் சந்தித்துப் பேசுவதற்கு ஆனந்தசங்கரி மறுத்துவிட்டார் என்று யாழ்.மாவட்ட தனியார் பஸ் உரிமையாளர் சங்கங்களின தலைமைச் செயலகத்தின் அறிக்கையிலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக வடபிராந்திய யாழ்.ஆங்கில மருந்து வணிகர் மன்றமும் அறிக்கையை வெளியிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பு-அம்பாறையில் வரதரணி போட்டியிடாதாம்!

## தேசிய அமைப்பாளர் கூறுகிறார்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் எதிர்வரும் நாடாளுமன்ற பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில்லையென ஈ.பி.ஆர்.எல்.எவ் வரதர் அணி தீர்மானித்துள்ளது.

தேர்தலில் போட்டியிடுவதற்கு ஏற்ற ஜனநாயக சூழல் இல்லாதிருப்பதாலும், மாற்றுக் கருத்துக்களைக் கொண்ட தமிழ்க்கட்சிகள் சுயாதீனமாக செயறபடக்கூடிய சூழல் இல்லாதிருப்பதாலும், இந்தத் தீர்மானத்தை எடுத்ததாக கட்சியின் தேசிய அமைப்பாளரும், போரதீவுப்பற்று பிரதேசசபைத் தலைவருமான இரா. துரைரத்தினம் தெரிவித்தார்.

இந்த மாவட்டங்களில் - புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களிலோ, படையினரின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலோ சுதந்திரமாக நடமாடமுடியாது. மாற்றுத் தமிழ்க் கட்சிகள் முடக்கப்பட்ட சூழ்நிலை நிலவுகின்றது.

இந்த நிலையில், தேர்தலில் போட்டியிடும் பட்சத்தில் சுதந்திரமாக எம்மால் பிரசாரம் செய்யக்கூடிய நிலைமை இப்போது இந்த இரு மாவட்டங்களில் இல்லை.

இதனால்தான், இந்த மாவட்டங்களில் பொதுத்தேர்தலில் போட்டியிடுவதில்லை எனத் தீர்மானித்ததாக அவர் மேலும் தெரிவித்தார்.

## நிதானமாக...

நிலை தோன்றியுள்ளது.

கடந்த காலங்களில் இனக்கலவரங்களால் தமிழ்மக்களை அழித்த இந்த இனவாதிகள் தேர்தலில் வெல்வதற்காக பரப்புரை செய்யும் இந்த சூழ்நிலையில் தமிழ்மக்கள் தெளிவாக இவற்றைப் புரிந்துகொள்ள வேண்டும்.

அத்துடன் எந்தநிலையிலும் தமிழ்மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டுமென்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# மாணவர்களின் நடவடிக்கையின் எதிரொலி கல்வியியற் கல்லூரி இயங்கமுடியாதநிலை!

## கல்வியியற் கல்லூரி பீடாதிபதி தெரிவிப்பு

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்கள் சிலரின் நடவடிக்கைகளால் கல்லூரி தொடர்ந்தும் இயங்கமுடியாத நிலை ஏற்பட்டு வருவதாக கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி.கமலநாதன் தெரிவித்தார்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி மாணவர்களுக்கும் - கல்லூரி நிர்வாகத்தினருக்கும் இடையே ஏற்பட்டுவரும் முரண்பாடுகள் குறித்து, மாணவர்களின் பெற்றோர்களைக் கலந்துரையாடலுக்கு வருமாறு விடுக்கப்பட்ட அழைப்புக் கடிதத்திலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

மாணவர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் தம்மைப் புண்படுத்தியிருப்பதாகவும் எனவே, மாணவர்களின் நடவடிக்கைகள் குறித்துக் கலந்துரையாடுவதற்கு பெற்றோரை நாளை காலை 10 மணிக்கு கல்லூரிக்கு வருமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டம் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களிலிருந்து வந்து கல்வி கற்கும் மாணவர்களின் பெற்றோர்களை எதிர்வரும் சனிக்கிழமை வருமாறும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி கூட்டத்திற்கு பெற்றோர் சமூகம் தரவில்லையெனில், அன்றைய தினமே கல்லூரியில் கற்கும் அவர்களது பிள்ளைகள் வீட்டிற்கு அனுப்பி வைக்கப்படுவார்கள் என்ற எச்சரிக்கையும் பீடாதிபதியால் விடுக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.கவுடன்..

ளர் காங்கிரஸின் சிரேஷ்ட உபதலைவர் ஆர்.யோகராஜன் தெரிவித்தார்.

ஐந்து மாவட்டங்களில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து போட்டியிடுமென்றும் அவர் கூறினார்.

கண்டி மாவட்டத்தில் மதியுகராசாவும், பாயிஸ் முஸ்தபாவும், நுவரெலியா மாவட்டத்தில் ஆறுமுகம் தொண்டமான், முத்து சிவலிங்கம், எஸ்.ஜெகதீஸ்வரன் ஆகியோரும், மாத்தளை மாவட்டத்தில் எஸ்.சிவராசாவும், கொழும்பு மாவட்டத்தில் ஆர்.யோகராஜனும், பதுளை மாவட்டத்தில் சச்சிதானந்தம், வடிவேல் சுரேஷ் ஆகியோரும் போட்டியிடவுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சொல்ஹெய்ம் - பாலா..

இந்தச் சந்திப்பின்போது வொஷிங்ரனில் கடந்த 17 ஆம் திகதி நடைபெற்ற இலங்கைக்கு நிதியுதவி வழங்குவது தொடர்பாக மீளாய்வு மாநாட்டில் ஆராயப்பட்ட விடயங்கள் குறித்து எரிக்சொல்ஹெய்ம், கலாநிதி அன்ரன் பாலசிங்கத்துக்கு விளக்கிக் கூறவுள்ளதாகத் தெரியவருகிறது.

இந்த மாநாட்டில், இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைகள் விரைவில் முன்னெடுக்கப்படவேண்டும் என்றும் அதன் பின்னரே உதவியளிக்க உறுதியளிக்கப்பட்ட நிதியுதவிகள் வழங்கப்படும் என வொஷிங்ரன் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானம் குறித்து விரிவாக விளக்கமளிக்கப்படும் எனவும் தெரிகிறது.

## தேர்தல் பணிகளில்..

பாடற்ற பிரதேசங்கள் அனைத்திலும் மக்கள் நடமாடக்கூடிய பாதுகாப்பான நிலைமையினை உறுதிப்படுத்தும் வகையில் கண்காணிப்புகுழு தமது கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபடவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது

வடபகுதியில் முகமாலை, ஓமந்தை, உயிலங்குளம் ஆகிய இடங்களிலும், கிழக்குப் பகுதியில் மூதூர் கிழக்கு, வாழைச்சேனை, கிரான், செங்கலடி, பட்டிருப்பு ஆகிய இடங்களுக்கு படையினரின் கட்டுப்பாட்டிலிருந்து வாக்களிக்க செல்லும் மக்களின் சுதந்திரமான நடமாட்டத்தினை உறுதிப்படுத்தும் வகையில் தமது கண்காணிப்பு நடவடிக்கைகள் அமையுமெனவும் கண்காணிப்பு குழு அலுவலகம் தெரிவித்துள்ளது.

## கத்தரிக்கோல்...

படங்களை வெட்டிக்கொண்டிருந்த சமயம் தனது சகோதரி வைத்திருந்த கத்தரிக்கோலை ரேகா பறித்துக்கொண்டு ஓடியுள்ளார்.

அவ்வேளை வீட்டின் வாசல் கதவுடன் மோதி கீழே விழுந்த சிறுமியின் கழுத்தில் கத்தரிக்கோல் குத்தியுள்ளது. இதனால் ஏற்பட்ட இரத்தப்பெருக்கால் சிறுமி துடிதுடித்து மரணமடைந்துள்ளார்.

சிறுமியின் உடல் தற்போது பிரேதபரிசோதனையின் பொருட்டு யாழ்.போதனா வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. (தீ-121)

## கட்சி தாவினார்...

வட்டாரங்கள் தெரிவித்தன.

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் 1977 ஆம் ஆண்டு முதல் 1989 ஆம் ஆண்டு வரை நீண்ட காலம் நிதி அமைச்சராக இருந்த றொனிடிமெல், கடந்த மூன்று தேர்தல்களிலும் சிறிலங்கா சுதந்திரக் கட்சிக்கும், ஐக்கிய தேசியக்கட்சிக்கும் இடையில் அடிக்கடி மாறியுள்ளார்.

றொனி டிமெல் 2001 ஆம் ஆண்டு தேர்தலில் போட்டியிடவில்லை.இவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சி தேசியப் பட்டியல் மூலமாக நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டிருந்தார்.

அதேவேளை, 2001 ஆம் ஆண்டு தேர்தலில் மல்லிகா டிமெல் மாத்தறை மாவட்டத்தில் போட்டியிட்டு நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்யப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

## வவுனியா பஸ் விபத்தில்...

(வயது 60) என்பவரும் மன்னார் உப்புக்குளத்தைச் சேர்ந்த கிருபாகரன் கிருபாசினி (வயது 04) ஆகிய இருவருமே உயிரிழந்தவர்களாவர்.

நேற்றுக் காலை 10 மணிக்கு 35 பயணிகளை ஏற்றிக்கொண்டு வவுனியாவிலிருந்து மன்னார் நோக்கிச் சென்றுகொண்டிருந்த தனியார் பஸ் குருக்கள் புதுக்குளம் பகுதியில் விபத்துக்குள்ளாகியது.

வேகமாகச் சென்ற பஸ் கட்டுப்பாட்டை இழந்து வீதியிலிருந்து விலகி விபத்துக்குள்ளாகியது.

காயமடைந்தவர்களில் 15 பேர் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 12 பேர் படுகாயமடைந்திருந்தனர். இவர்களில் இருவர் ஆபத்தான நிலையில் அநுராதபுரம் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டதாக வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள தெரிவித்தன. விபத்துக்குள்ளான தனியார் பஸ்ஸின் சாரதியும் நடத்துநரும் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக போக்குவரத்துப் பிரிவுப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (03)

**SAGE Accounting Package**

சர்வதேச தரத்தில் அங்கீகரிக்கப்பட்ட ஒரு கணனியூடான கணக்கியல் மென்பொருள்
SAGE

*Certificate issued by -*
*CMA - Srilanka*
*Recognized by -*
*CMA - canada*

- ☆ பட்டதாரிகளுக்கு விசேட சலுகை
- ☆ அடிப்படை கணக்கியல், கணனி அறிவு அவசியமில்லை
- ☆ அனுமதிகள் 10.03.2004 வரை ஏற்றுக்கொள்ளப்படும்
- ☆ *aat* 2004 June இற்குரிய அனுமதிகள் 29.02.2004 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

CAREER.COM INSTITUTE, No. 79, Main St, Jaffna.

## கூட்டமைப்பு வேட்பாளர்...

சுரேஷ் பிறேமச்சந்திரன் (கோப்பாய்),முன்னாள் ஆசிரியை பத்மினி சிதம்பரநாதன்(அராலி), யாழ்.மாவட்டக் கூட்டுறவுச் சங்க தலைவர் சொலமன் சூ.சிறில் (கோவில்வீதி யாழ்ப்பாணம்)பனை அபிவிருத்தி கூட்டுறவுப்பணியாளர் இ:சிவனேசன் (கரவெட்டி கிழக்கு கரவெட்டி)

தமிழீழ மாணவர் பேரவைத் தலைவர் செல்வராசா கஜேந்திரன் (துன்னாலை மத்தி கரவெட்டி) முதலானோரின் பெயர்கள் வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றுள்ளன.

இவர்களைவிட யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப்பேரவையின் பிரசார செயலாளர் ம.க.ஈழவேந்தன் (கொழும்புத்துறை), யாழ்.மாவட்ட வடமராட்சி கடற்றொழிலாளர் சங்கங்களின் சமாசச் செயலாளர் சி. சூரியகுமார் (வட்டுக்கோட்டை), வெளிவாரிப் பட்டப்படிப்புக்கள் கல்லூரி இயக்குநர் அ.குமாரவேல் (ஆனைக்கோட்டை),

முஸ்லீம்களின் சார்பில் சட்டத்தரணி இமாம் (யாழ்ப்பாணம்), யாழ்.மாவட்ட தேசிய எழுச்சிப் பேரவையின் ஊடகப்பேச்சாளர் ப. கனகலிங்கம் (புங்குடுதீவு), இடம் பெயர்ந்தோர் நலன்புரிச்சங்கங்களின் சமாசத் தலைவர் நா.கணேசன் (வலிகாமம்) முதலானோர் தேசியப் பட்டியல் வேட்பாளர்களாகவும், குறிப்பிடப்பட்டு உள்ளனர்.

தேசியப்பட்டியல் வேட்பாளர் பெயர்களில் மேலும் சிலரது பெயர்கள் குறிப்பிடப்படலாம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 23.02.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.